Not for sale

மே - ஜூன் 2014

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom




## அடிப்படையான சத்தியங்கள் பகுதி - 1


உமது வசனமே சத்தியம் • பூலோகத்தையும், பரலோகத்தையும் சிருஷ்டித்த தேவன்

கர்த்தரே என் தேவன் • ஜீவ ஆத்துமா • செத்துக்கொண்டே சாவாய்

மரித்தோரின் நித்திரை

அடிப்படையான சத்தியங்கள் (பகுதி1)

# ஆதியிலே



அஸ்திபாரமே எந்த ஒரு கட்டிடத்தின் முக்கிய பகுதியாகும். இது நன்கு ஊன்றப்பட்டு, ஏற்றவிதத்தில் வடிவமைக்கப்பட்டு சரியாகக் கட்டப்பட்டிருந்தால், அந்தக் கட்டிடம் ஒரு நிலையான அஸ்பாரம் பெறும். பூமி அதிர்ச்சிகளும், புயல்களும் அந்தக் கட்டிடத்தைத் தாக்கினாலும், போடப்பட்டிருக்கும் உறுதியான அஸ்திபாரம் எல்லா சோதனைகளிலும் நிலைத்து நிற்கும். இப்படியாக, சரியான அஸ்திபாரத்தின் மேல் நம்முடைய கிறிஸ்தவ குணங்கள் கட்டப்படுவதின் முக்கியத்துவத்தை இயேசு வலியுறுத்துகிறார்.

"பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்" (மத். 7:24-25).

நம்முடைய வாழ்க்கையில் நம்முடைய விசுவாசம் சோதிக்கப்படும்போது, நீடிய பொறுமையோடு சகித்து, அவைகளில் வெற்றிபெற நம்முடைய கிறிஸ்தவ குணநலன்கள் தேவனுடைய சத்தியத்தின் மேல் கட்டப்பட்டிருக்க வேண்டும். இந்த ஹெரால்டு பிரதியில், தேவன் மேல் நம்முடைய விசுவாசம், அவருடைய இரட்சிப்பின் திட்டம் மற்றும் இயேசுவின் அடிச்சுவடுகளில் நம்முடைய நடைகளை வழி நடத்தக்கூடிய அடிப்படையான அஸ்திபாரமான சத்தியங்களை ஒன்றுக்குப் பின் ஒன்றாக நாம் நினைவுபடுத்துகிறோம்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று நாம் நம்பக்கூடிய கருத்தை, "உம்முடைய வசனமே சத்தியம்" என்ற கட்டுரை விவரிக்கிறது. இது, வேதாகம வரலாறு. வேதாகமத்தின் நல்லொழுக்கக் கோட்பாடுகள் மற்றும் வேதாகம தீர்க்கதரிசன நிறைவேற்றல்களைத் துல்லியமாக ஆராய்கிறது.

"பிக் பேங்" கூற்றின் விஞ்ஞான கண்டுபிடிப்புகள், ஜீவனின் துவக்கம், அண்டை வெளியின் சிருஷ்டிப்பு, சூரியன் மற்றும் சந்திரனின் செயல்பாடுகள் மற்றும் ஆதியாகமத்தோடு இசைந்திருக்கும் தாவரங்கள் மற்றும் மிருகங்களின் சிருஷ்டிப்பைக் குறித்து, "பரலோகத்தையும், பூலோகத்தையும் சிருஷ்டித்த தேவன்"என்ற கட்டுரை விவரிக்கிறது.

நம்முடைய சிருஷ்டிகரின் குணம் மற்றும் கடந்தகால செயல்பாடுகளில் மனுக்குலத்தின் இரட்சிப்பிற்காக தேவனுடைய திட்டத்தில் அவருடைய நீதி, ஞானம், வல்லமை மற்றும் அன்பின் வெளிப்பாடுகளைக் குறித்து, "கர்த்தரே என் தேவன்" என்ற கட்டுரை ஆராய்கிறது. அடுத்து, மனுக்குலத்தை சிருஷ்டித்ததின் நோக்கம் தீமையை அனுமதித்ததின் வழியாக எப்படிப்பட்ட அறிவையும், அனுபவத்தையும் தேவன் மனுஷனுக்காகக் கொடுக்க விரும்பினார் என்றும், மனுஷனுடைய இரட்சிப்பிற்காக தேவனுடைய குமாரன் ஏன் மாம்சத்தில் வரவேண்டும் என்ற காரணத்தைக் குறித்தும், "ஒரு ஜீவ ஆத்துமா" என்ற கட்டுரை விவரிக்கின்றது. ஏதேன் தோட்டத்தில், ஆதாம் மற்றும் ஏவாள் தேவனுக்குக் கீழ்ப்படியாமற்போன காரணத்தையும், மீண்டும் மனுஷனுடைய இருதயம் ஜீவனைப் பெறக்கூடிய நிலைக்கு மறுரூபமாகும்படி தேவன் அனுமதித்த இந்த அனுபவங்களைக் குறித்து, "செத்துக்கொண்டே சாவாய்" என்ற கட்டுரை கருத்துக்களை முன் வைக்கின்றது. இறுதியாக, அனைவரும் "நித்திரை"யிலிருந்து எழுப்பப்படும் காரியத்தை மரணம் என்று வேதாகமம் எவ்வாறு விவரிக்கிறது என்பதை, "மரித்தோரின் நித்திரை" என்ற கட்டுரை மறு ஆய்வு செய்கிறது.

இந்தப் பிரதி மற்றும் இதை அடுத்துவரும் (செப்./அக். 2014) ஹெரால்டு பிரதியின் கட்டுரைகள், நம்முடைய விசுவாசத்தைப் பெலப் படுத்தி, நாம் அதிகமாக நேசிக்கும் அஸ்திபாரமான சத்தியங்களை இன்னும் தெளிவாகப் புரிந்து கொள் வதற்கு ஏதுவாய் இருக்கும் என்று நம்புகின்றோம்.

**மே - ஜுன் 2013**


**உமது வசனமே சத்தியம்** 2

வேதாகமத்தின் தூண்டுதல்

**பூலோகத்தையும், பரலோகத்தையும் சிருஷ்டித்த தேவன்** 7

சிருஷ்டிப்பு

**கர்த்தரே என் தேவன்** 12

தேவனுடைய இயல்பு

**ஜீவ ஆத்துமா** 17


மனுஷனுடைய இயல்பு

**செத்துக்கொண்டே சாவாய்** 22

ஆதி பாவம்

**மரித்தோரின் நித்திரை** 27

மரணத்தின் இயல்பு



வேதாகமத்தின் தூண்டுதல்

# உமது வசனமே சத்தியம்

"காரியத்தை மறைப்பது தேவனுக்கு மேன்மை; காரியத்தை ஆராய்வதோ ராஜாக்களுக்கு மேன்மை" (நீதி. 25:2).

James Parkinson

வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்றும், அதுமட்டுமே விசுவாசத்திற்கும், சத்தியத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ள ஒரே படிநிலை என்றும், சிந்திக்கக்கூடிய ஒரு நபருக்கு நியாயமான சந்தேகங்கள் ஏற்படுவது இயல்பு அல்லவா? ஒருவர் இரண்டு அல்லது மேற்பட்ட வேதாகம பதிவுகளிலுள்ள வரலாற்றை ஆயிரமாயிரமான வருடங்களுக்கு முன் பாதுகாக்கப்பட்ட பழமையான பதிவுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். அதற்குப் பின், வேதாகம நல்லொழுக்கக் கோட்பாடுகள் நியாயமானதாகவும், நீதியுள்ளதாகவும் இருக்கும்பட்சத்தில், அவைகளை வடிவமைக்கப்பட்ட மனுஷனுடைய நீதிக்கு எவ்வாறு ஒப்பிடுவது? எந்தத் தீர்க்கதரிசனங்களும் இந்நாள் வரைக்கும் தோல்வியடைந்தது உண்டோ? இறுதியாக, மீதியிருக்கும் தீர்க்கதரிசனங்கள் வேதாகமத்தில் கோரப்பட்டுள்ள தேவனுடைய நீதியோடும், அன்போடும் இசைந்திருக்கிறதா?

**வேதாகம வரலாறு துல்லியமானது**

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன் (ஆதியாகமம் மற்றும் ஏசாயா 42:5-ம் வசனத்திற்கும்) எதிரிடையாக, எந்தவிதமான துவக்கமும் இல்லையென்று விஞ்ஞானிகள் ஒத்துக்கொண்டனர். ஆனால், இன்று அண்டசராசரத்தின் விரிவுக்குரிய சதவிகிதமான செயற்கைக் கோள் அளவுகள்; நவீன விஞ்ஞானிகள் அண்டசராசரத்திற்கு ஒரு துவக்கம் உண்டு என்று ஏற்றுக்கொள்வதற்குக் கட்டாயப்படுத்துகிறது. இதை ஒரு "பிக் பேங்" கூற்று என்று சிலர் அழைக்கின்றனர். நவீன வளர்ச்சிக்குரிய நட்சத்திர விஞ்ஞானம் அறியாத காரியங்களைக் கூட மூவாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு முன் இக்கருத்தை மோசே எவ்வாறு அறிந்திருந்தார்?

வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு யுத்தத்தைக் குறித்து, ஆதியாகமம் 14-ம் அதிகாரம் கூறுகிறது. சிநெயாரின் மகாராஜா தன்னுடைய கூட்டாளிகளோடு மேற்கத்திய தேசங்களைக் கைப்பற்றினான். பதினான்கு வருடங்களுக்குப் பின் ஆபிரகாம் அவனைக் கொன்றுபோட்டு, அவனுடைய கூட்டாளிகளைத் திடீரென்று தாக்கினார். இப்பொழுது இந்த வர்ணனைக்குப் பொருந்தக்கூடிய ஒரு தொல்பொருள் ஆராய்ச்சி கொடுக்கும் ஆதாரமாக இந்த இராஜா காணப்படுகின்றான். உதாரணம், சிநெயாரின் இராஜா, "நொறுக்கப்பட்ட பாத்திரத்தைப்போல போர்க்களத்தில் புறக்கணிக்கப்பட்டான்" என்கிறது இந்த வரலாற்று ஆதாரம். (செப்புக் காலத்தின் துவக்கத்தில் இந்த முடிவு ஏற்பட்டிருக்கலாம்).

அதுபோல, யோசேப்பு, எகிப்து தேசத்தின் ஏழு வருட கொடிய பஞ்சத்தில் தேசத்தைத் தப்புவித்து தொடர்ந்து சமாதானத்தைத் தக்க வைத்ததைக் குறித்து பதிவுகள் ஆதியாகமத்தில் காணப்படுவதற்கு ஒப்பாக, அமெனேமெஸ் 111 நீண்ட காலமாக சமாதானமாக ஆட்சி செய்தார் என்று வரலாற்றில் காணப்படுகிறது. மேலும், ஹமாமேட் கல்குவாரிகள் விளைநிலங்களுக்குச் சாதகமாக மூடப்பட்டதையும் குறிப்பிடுகிறது.

மீண்டுமாக, யாம்பிரஸ் அசிஸ் பார்வோன் அரசனின் மூன்றாவது வருட ஆட்சியின் முடிவில், மோசே இஸ்ரயேலர்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துச் சென்றார் என்று ஆதாரங்கள் கூறுகிறது (Pharaoh Mayebre Sheshi - 2 தீமோ. 3:8). மேலும், அதற்குப் பின் எகிப்தின் இராணியாகிய ஹாட்ஷெப்சுட், "பாழாய்க் கிடந்ததை சீர் பொருத்தினேன், ஆரியர்கள் முடித்திராததை அவேரிஸ் (பிற்காலத்தில் "ராமசேஸ்" எனப்பட்டது) மத்தியிலும் வடதேசத்தின் பார்பேரியன்ஸ் இஸ்ரயேலர்கள் மத்தியிலும் விடுபட்டதை நான் கட்டி எழுப்பினேன்" என்று பதிவு செய்திருக்கிறாள்.

James Henry Breasted, Ancient Records of Egypt, Volume 2, paragraph 303. (எகிப்தை அழிக்க பத்து வாதைகள் பார்பேரியன் என்று அழைக்கப்படும் இஸ்ரலேர்களால் ஏற்பட்டது என்று குறிப்பிடப்படுகிறது.)

வேதாகம வரலாற்று பதிவுகளைக் குறைத்து எழுதக்கூடியவர்களைக் குறித்து எகிப்தைச் சேர்ந்த கென்னத் கிட்ச்சன் இவ்வாறு கூறுகின்றார். "கடந்த சில வருடங்களாக பழைய ஏற்பாடு எழுத்துக்களின் எல்லையற்ற கண்ணோட்டங்கள் மிக விரிவாக பிரசித்தப்படுத்தப்பட்டுள்ளது.,, பழைய ஏற்பாட்டின் எழுத்துக்கள் வரலாற்றுப் பூர்வமாக சார்ந்திட முடியாததாகவும், குறைந்த மதிப்புள்ளதாகவும் கருதப்படுகிறது."

நானூறு பக்கங்களுக்கு மேலாக மறு ஆய்வு செய்த பின்னும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர், "கிமு 2000 மற்றும் கிமு 400 வரையில் உள்ளான பொதுவான

வரலாற்றோடு பழைய ஏற்பாடு சரியாகப் பொருந்துகிறது. அதை எழுதும் எழுத்தாளர்கள் சரியான முறையில் எழுதும் பட்சத்தில் இது சரியாகப் பொருந்திக் காணப்படும்." தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பழமையான வரலாற்றோடு வேதாகமம் இசைந்து காணப்படுவதோடு மட்டுமல்ல, அவைகள் அந்த வேதாகமத்தைப் பிரகாசிக்கவும் செய்கிறது.

### வேதாகமத்தின் நல்லொழுக்கக் கோட்பாடுகள்

மோசேயின் நியாயப்பிரமாணங்கள் துல்லியமாக சொல்லப்போனால், தேவன் மோசேயின் மூலமாக இஸ்ரயேலருக்குக் கொடுத்த நியாயப்பிரமாணம் அதிலுள்ள நீதியினிமித்தம் தனிச்சிறப்பு வாய்ந்ததாகக் காணப்படுகிறது. "உங்களில் பரதேசிக்கும் சுதேசிக்கும் ஒரே நியாயம் இருக்கவேண்டும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார்." (லேவி. 24:22; எண். 15:16) "பரிதானம் வாங்காதிருப்பாயாக; பரிதானம் பார்வையுள்ளவர்களைக் குருடாக்கி நீதிமான்களின் வார்த்தைகளைப் புரட்டும்" (யாத். 23:8).

"அனைவரும் செய்கிறார்களே!" என்ற பொதுவான வார்த்தை தவறு செய்வதற்கான சாக்கு அல்ல. இந்தக் கருத்து பழமையான பிரமாணத்தில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. "தீமை செய்ய திரளான பேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக; வழக்கிலே நியாயத்தைப் புரட்ட மிகுதியானவர்களின் பட்சத்தில் சாய்ந்து, உத்தரவு சொல்லாதிருப்பாயாக. உன்னிடத்திலிருக்கிற எளியவனுடைய வியாச்சியத்தில் அவனுடைய நியாயத்தைப் புரட்டாயாக. வியாச்சியத்திலே தரித்திரனுடைய முகத்தைப் பாராயாக." (யாத். 23:2, 6, 3).

ஒரு எபிரெய ஊழியக்காரனை விலைக்கு வாங்கினாலும், அவனை வாழ்நாள் முழுவதும் அடிமையாக வைத்திருக்க அனுமதியில்லை. ஆறு வருடங்களுக்குப் பின் அவன் விடுதலையாக்கப்பட வேண்டும். மேலும், அந்த எஜமான் ஆறு வருடத்திற்குள் அந்த அடிமையை அடித்து ஒரு பல் விழுந்தாலோ, ஒரு கண் குருடாக்கப்பட்டாலோ, கேள்விக்கு இடமின்றி அவன் உடனடியாக விடுதலைப் பெற்றுச் செல்லலாம் (யாத். 21:2, 26).

ஒரு மனிதன், மற்றவனுக்கு தீங்கிழைத்தால், அந்த இழப்பிற்குப் பதிலாக வேறு காரியங்கள் ஈடாகக் கொடுக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. "ஒருவன் பிறனை ஊனப்படுத்தினால், அவன் செய்தபடியே அவனுக்கும் செய்யப்படக்கடவது. நொறுக்குதலுக்கு நொறுக்குதல், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்; அவன் ஒரு மனிதனை ஊனப்படுத்தினதுபோல அவனும் ஊனப்படுத்தப படவேண்டும்" (லேவி. 24:19-20). ஆயினும், ஒரு மனிதன் மற்றொருவனை தற்செயலாகக் கொன்றுவிட்டால், அவன் நியாயமாக விசாரிக்கப்படுவதற்கு உடனடியாக அடைக்கலம் பட்டணத்திற்கு ஓடிவிடலாம். அவன் உண்மையான குற்றவாளியாக இருந்தால், மரண தீர்ப்பைப் பெறுவான். அவன் நிரபராதி என்று கண்டுபிடிக்கப்பட்டால், அந்த பட்டணத்தின் பிரதான ஆசாரியன் உயிரோடு இருக்கும் நாளளவும் அவன் பத்திரமாக அந்த பட்டணத்திற்குள் ஜீவிக்கலாம் (எண். 35:11-32).

குற்றவாளிகள் நியாயத்தீர்ப்பிலிருந்தும் அல்லது தண்டனையிலிருந்தும் தப்பிப்பதற்கு எந்த வழிகளும் இல்லை. "அவர்கள் உனக்கு உணர்த்தும் பிரமாணத்தின்படியும், உனக்குச் சொல்லும் நியாயத்தீர்ப்பின்படியும் செய்யக்கடவாய்" (உபா. 17:11). ஆகவே, "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள்முழுதும் அது என் தியானம்" (சங். 119:97) என்று தாவீது அரசன் கூறியிருக்க வேண்டும்.

சிநெயாரின் ஊர் - நாமு, யஷ்னுனா மற்றும் பாபிலோனின் ஹமுராபி- இவர்களின் ஆதி பிரமாணங்களைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டனர். மோசேயின் பிரமாணம் எந்தவிதமான நபருக்கும் தனிப்பட்ட மதிப்பைக் கொடுக்கவில்லை. இதுவே, இங்குக் காணப்பட்டுள்ள வேறுபாடாகும். "இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது" (மத். 22:37-40; மாற். 12:29-31) என்று இயேசு நியாயப்பிரமாணத்தைச் சுருக்கமாகக் கூறினார்.

நியாயப்படி பார்த்தால், வேதாகமத்தில் காணப்படும் தேவனுடைய பிரமாணம் மனுஷனால் ஏற்படுத்தின எந்தவிதமான சட்டத்திற்கும் சமமாக பாவிப்பது இயலாத காரியம்.

#### இந்நாள் வரைக்கும் உண்மையாக திகழும் தீர்க்க தரிசனங்கள்: :-

இஸ்ரயேலுக்கு வட திசையிலுள்ள கடலோரப் பட்டணங்களாகிய தீரு, சீதோனுக்கு எதிராக நியாயத்தீர்ப்புகளை, எசேக். 26-28 அதிகாரங்களில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டுள்ளது. அந்தப் பட்டணத்திற்கு வரும் அழிவு விரைவாகவோ, தாமதமாகவோ இருக்கலாம் என்று ஒருவர்

எதிர்பார்க்கலாம். ஆயினும் சீதோன், யேகோவா தேவனைப் பற்றி அறிந்தாலும், அதன் அழிவு நிச்சயம் என்று தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டுள்ளது. அந்தப் பட்டணம் இனி என்றும் கட்டப்படுவதில்லை என்றும் உரைக்கப்படுகிறது. சீதோன் பட்டணம் பலமுறை சிறை பிடிக்கப்பட்டாலும், அது உயிர் வாழ்ந்தது. அதற்கு மாறாக, தீரு பட்டணம் முழுமையாக அழிக்கப்பட்டாலும், கடலிலிருந்து அரை மைல் தொலைவிலுள்ள ஒரு தீவில் அது புதிதாகக் கட்டப்பட்டது. பாபிலோனின் நேபுகாத்நேச்சார், தீருவின் பட்டணத்தை 13 வருடங்கள் முற்றிகையிட்டாலும் அதை முற்றிலுமாக அழிக்கத் தவறினான் என்பதைப் பார்க்கும்போது, தீருவைப்பற்றி உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் நம்பத்தகாததுப் போல தோன்றலாம். ஆனால், மக்கெதோனியாவிலுள்ள அலெக்சாண்டர் அதைக் கைப்பற்றி அந்தத் தீவை தரைமட்டமாக்கி அழித்தபோது, அந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியது. இந்நாள் வரைக்கும் அங்குக் காணப்படும் பாறைகள் மீன்பிடிக்கும் வலைகளை உலர வைப்பதற்கு மீனவர்களால் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது - இப்படியாக, இந்தத் தீர்க்கதரிசனம் தொடர்ந்து நிறைவேறிவருகிறது.

தேவனுடைய இராஜ்யம் இந்தப் பூமியில் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன் பாபிலோன் சாம்ராஜ்யத்திற்குப் பின் மூன்று சாம்ராஜ்யங்கள் எழும்பும் என்று நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தில் முன்னறிவிக்கப்பட்டது (தானி. 2-ம் அதிகாரம் கிமு 2-ம் நூற்றாண்டை ஒத்திருக்கிறது என்று கும்ரான் பதிவுகள் கூறுகிறது). கிமு 164-ம் வருடம் வரையில் தானியேலின் புத்தகம் எழுதப்படவில்லை என்று கூறப்பட்டாலும் (தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களுக்குத் தேவைப்படும் ஆதாரம் முற்றிலுமாகத் தொலைந்து போனது). இருபத்தொரு நூற்றாண்டுகளாக ரோம பேரரசை மேற்கொள்வதற்கு எந்த ஒரு பேரரசும் வரவில்லை என்பதை அவர்கள் மறுக்க இயலாது. தானியேல் 7-ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்ட நான்கு மிருகங்களைப் பற்றிய காட்சி, இன்று உலக வரலாற்றோடு துல்லியமாக இசைந்து காணப்படுகிறது. தேவன் காரியங்களை அறிவிக்காவிட்டால் இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு முன் நடந்த காரியங்களை தானியேல் எவ்வாறு அறிந்திருக்க முடியும்?

இஸ்ரயேலுக்குத் தொடர்புள்ள தீர்க்கதரிசனங்கள் இன்னும் சிறப்பு வாய்ந்ததாகக் காணப்படுகிறது. தேவனுடைய பிரமாணத்திற்கு இஸ்ரயேலர்கள் கீழ்ப்படிந்திருந்தால், அவர்கள் ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள் என்றும், அதேநேரத்தில் அந்தப் பிரமாணங்களை மீறினால், தேவனுடைய ஆசீர்வாதங்களையும், பாதுகாப்பையும் இழந்து விடுவார்கள் என்று தேவன் இஸ்ரயேலர்களுக்கு வாக்களித்திருந்தார். "கர்த்தர் உன்னைப் பூமியின் ஒரு முனை துவக்கி பூமியின் மறுமுனைமட்டும் இருக்கிற எல்லா ஜனங்களுக்குள்ளும் சிதற அடிப்பார்" (உபா. 28:64). மேலும், "உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற உன்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார். உன் பிதாக்கள் சுதந்தரித்திருந்த தேசத்தை நீ சுதந்தரிக்கும்படிக்கு, உன்தேவனாகிய கர்த்தர் அதில் உன்னைச் சேர்த்து, உனக்கு நன்மைசெய்து, உன் பிதாக்களைப் பார்க்கிலும் உன்னைப் பெருகப்பண்ணுவார்" (உபா. 30:3, 5) என்று அதற்குப் பின்னும் வாக்களித்தார். (வனாந்தரத்தில் மோசே இரண்டுமுறை ஜனங்களைக் கணக்கெடுத்தார். கிட்டத்தட்ட மூன்று மில்லியன் ஜனங்கள் கணக்கிடப்பட்டார்கள்- (எண். 1, 2, 26). தாவீது இராஜாவின் காலத்தில் இந்த ஜனத்தொகை இரட்டிப்பாக இருந்திருக்க வேண்டும். இன்று 40% யூதர்கள் உலகில் காணப்பட்டாலும், இஸ்ரயேலில் யூதர்கள் மட்டுமே ஆறு மில்லியன் ஜனங்கள் காணப்படுகிறார்கள் - நூற்றுக்கணக்கான வருடங்களாக தாய்நாட்டிலிருந்து சிதறடிக்கப்பட்ட ஜனங்கள் இப்படியாக கூட்டிச் சேர்க்கப்படுவது சாத்தியமா?) இஸ்ரயேல் ஜனங்கள் சிதறடிக்கப்பட்டதை உலகம் கண்டிருக்கிறது. சுமார் பதினெட்டு நூற்றாண்டுகளுக்குப் பின் 1870-ல், பத்தாயிரம் யூதர்களுக்குக் குறைவானவர்கள் பாலஸ்தீனாவில் குடியேறத் துவங்கினார்கள் - இப்பொழுதோ, 6 மில்லியன் யூதர்கள் அங்கு வசித்து வருகிறார்கள்!

### தேவனுடைய தூண்டுதலினால் கொடுக்கப் பட்டுள்ள வேதவசனம்

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பீட்டர் பார்சன்ஸ் என்பவர், "பழங்காலத்து வரலாற்றை கிரேக்க புதிய ஏற்பாடும், எபிரெய பழைய ஏற்பாடும் உண்மையென்று சாட்சிக் கொடுக்கிறது என்று கூறுகிறார்."

எடுத்துக்காட்டாக, அநேக பழங்கால கிரேக்க எழுத்தாளர்களின் எழுத்துக்கள், ஒரே பதிவாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதின் இடையில் காணப்படும் துளைகளில் உள்ள எழுத்துக்களை ஆராய்ச்சியாளர்கள் யூகிக்க வேண்டும். ஹோமர் என்பவருடைய வேலைகள் கூட, நூறு வருடங்களுக்கு முன் பதிவுகளில் காணப்படுகிறது. ஆனால், கிரேக்க புதிய ஏற்பாடு 3300 கைப்பிரதிகளில் காணப்படுகிறது. அதேநேரத்தில், லத்தீனில் மொழிபெயர்ப்பு கிட்டத்தட்ட பத்தாயிரம் பிரதிகளில் காணப்படுகிறது.

அராமிக் மொழியிலும் நூற்றுக்கணக்கானப் பதிவுகள் காணப்படுகிறது. பல பிரதிகள் எகிப்திய மொழியிலும் காணப்படுகிறது. பழமை வாய்ந்த கிரேக்க கைப்பிரதிகளுக்கும் மிகச் சமீபமாகக் கண்டுப்பிடிக்கப்பட்ட கைப்பிரதிகளுக்கும் மிகுந்த வித்தியாசம் காணப்படுகிறது.

எபிரெய பழைய ஏற்பாட்டு கைப்பிரதிகள் குறைவாகக் காணப்பட்டாலும், (சில நூறுகள்) வெகு சில வித்தியாசங்களே காணப்படுகிறது. சவக்கடலிலிருந்து எடுக்கப்பட்ட தோல் சுருள்கள், ஆராய்ச்சியாளர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தாலும், வேதத்தை விசுவாசிக்கக் கூடியவர்களுக்கு அவைகளில் கொடுக்கப்பட்டுள்ள ஆதாரம் உறுதியாகக் காணப்படுகிறது.

**வேதாகமத்தின் தூண்டுகோல்:-**

"வேதாகமம் எவ்வாறு எழுதப்பட்டது?" என்று ஒருவர் கேட்கலாம்.

"நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2 பேது. 1:16, 19, 21). இப்படியாக, தீர்க்கதரிசிகள் தேவனால் தூண்டப் பட்டார்கள். மேலும், இந்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றங்களை கண்ட அப்போஸ்தலர்கள் அதைத் தொகுத்து வழங்கினார்கள்.

உங்கள் விசுவாசத்தின் முடிவு, உங்கள் ஆத்துமாக்களின் இரட்சிப்பாயிருக்கிறது - "உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள். உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்" (1 பேது. 1:9-12).


சுயநலமின்றி தங்களையே பணையம் வைத்த விசுவாசமுள்ள தீர்க்கதரிசிகள், கிறிஸ்துவின் ஈடுபலியைக் குறித்தும், விசுவாசமுள்ள சபையாக வளர்ச்சியடையக்கூடிய அவருடைய சபையைக் குறித்தும் தைரியமாக முன்னறிவித் தார்கள். இயேசு, பலி பொருளாக வந்ததையும், ஜீவ பலியாக பலி செலுத்தக்கூடிய சபையின் துவக்கத்தைப் பற்றியும் புதிய ஏற்பாடு பதிவு செய்திருக்கிறது. இந்நாளிலும் சபையின் விசுவாசமுள்ள இறுதி அங்கத்தினர்கள் கிறிஸ்துவின் குணலட்சணத்தில் வளர்ச்சியடைவதைக் காணலாம். இறுதியான தீர்க்கதரிசனங்கள் நிறைவடையும் படியாக வெகு சீக்கிரத்தில் கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யம் நிச்சயமாக ஸ்தாபிக்கப்படும்.

"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளு தலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள் ளவைகளாயிருக்கிறது" (2 தீமோ. 3:16-17). அதாவது, உண்மையாக அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்துவின் சீஷர்கள் பயிற்சிப் பெறுவதற்கும், தங்களுடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையை சரியாக நடத்துவதற்கும், தேவையான எல்லா உபகரணங்களையும், ஆலோசனைகளையும் வேதவசனங்களிலிருந்து பெற்றுக்கொள்கிறார்கள்.

**நியாயமான முடிவுரை**

தேவனுடைய ஆவியின் தூண்டுதலினால் எழுதப்பட்ட வேதாகமம், எவ்வளவு அழகாக, துல்லியமான வரலாற்றையும், தீர்க்கதரிசனங் களையும் சகலவிதமான இரக்கத்தோடும், நீதியோடும், அன்போடும் எல்லாவித ஞானத்தோடும் தேவனுடைய சர்வவல்லமையோடும் வெளிப்படுத் தப்பட்டுள்ளது. ஆகவே, இந்த வேதாகமம், விசுவாசத்தையும், சத்தியத்தையும் அளவிடக்கூடிய நம்முடைய ஒரே அளவு கோலாய் இருக்கிறது.

# பூலோகத்தையும், பரலோகத்தையும் சிருஷ்டித்த தேவன்



"அவர்... பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்" (யோபு 26:7).

Richard Doctor

"ஏன் மற்றும் எப்படி" என்ற ஆதி மனிதனுடைய கேள்விகளுக்கு ஆதியாகமத்தில் ஆசிரியர் எவ்வளவு உணர்ச்சிவசப்பட்டிருப்பார்? மற்ற தேசங்களில் சொல்லப்படும் கூற்றுகளோடு ஆதியாகமத்தின் சிருஷ்டிப்பின் காரியங்களை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வேதாகமத்தில் சொல்லப்பட்டவைகள் மிக நியாயமான சிந்தையோடு வேரூன்றப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நியாயமான சிந்தைகளுக்கு ஊக்கமளிப்பதோடு, "விஞ்ஞான முறையில்" அனுபவமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் போது, விரைவாக முன்னேற்றத்தைக் காணலாம். ஆயினும், பொதுவாக அதன் வேதாகமத்தைச் சார்ந்திருக்கும் அடிப்படையானக் காரியங்கள் ஒதுக்கப்படுகிறது.

இதற்கு எதிரிடையாக நாம் பார்க்கும்போது, சிருஷ்டிப்பைக் குறித்து, ஆபிரகாமின் சுமேரியன் தாய் நாட்டின் கட்டுக்கதைகள் நம்மை அடையாளங்கள் நிறைந்ததும், இல்லாத இராட்சத பெண்ணாகிய டயாமட்-டை நோக்கி நம்முடைய கவனம் திணிக்கப்படுகிறது. துண்டிக்கப்பட்ட இந்தப் பெண்ணின் சரீரமே சிருஷ்டிப்புக்குரிய மூலப்பொருள் என்று நம்பப்படுகிறது. இதற்கு ஒத்த கதைகள் கிரேக்க நாட்டின் அருகிலும், ஜப்பானிலும் கூறப்பட்டு வருகிறது.

1930-ல் டாக்டர் எட்வின் ஹப்புல் செய்த வேலைகள் வரைக்கும் காலம் மற்றும் அண்டைவெளியின் சிருஷ்டிப்பைப் பற்றி ரோம ஆசிரியர் ஒவிட் என்பவரின் வேதாகமத்தைச் சார்ந்திராத நம்பிக்கையை நம்முடைய புரிந்துகொள்ளுதல் எதிர்த்தது. ஏனெனில், குழப்பமான ஒழுங்கின்மையாகவே காலமும் அண்டைவெளியும் துவக்கத்தில் காணப்பட்டது என்றும், அதற்குப் பின், தெய்வீக செயல்பாடுகளினிமித்தம் அவைகள் சீரமைக்கப்பட்டது என்றும் கூறினார்.

எதிரிடையாக இயற்கைக்கு வெளியே நிற்கும் சிருஷ்டிகரின் கண்ணோட்டத்தையும், இயற்கை, தானாகவே சிருஷ்டிக்கப்பட்டதன் காரியங்களையும் வேதாகமம் காட்டுகிறது.

அறிவு பெருகியிருக்கும் நாட்களில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். எடுத்துக்காட்டாக, சூரியன், ஹைட்ரஜன் சம்பந்தப்பட்டதும், காற்றில் எரியக்கூடிய விறகுகளினால் அல்ல; அது, அணுக்கள் இணைந்து ஜுவாலையாகக் காணப்படும் ஒரு சூளை என்று நாம் இப்போது நன்கு அறிந்திருக்கிறோம். பொருத்தமற்ற காரியங்களைப் புறக்கணித்து, ஆதியாகமத்தை இவ்வளவு எளிமையாக தழுவக்கூடிய அனைவரின் உண்மையுள்ள விசுவாசத்தை நாம் மதிக்க வேண்டும்.

#### ஓய்வு நாளை அனுசரித்தல்

ஓய்வு நாளின் ஒழுங்கிற்குரிய நேரடியான வசனங்கள் ஒவ்வொரு சிருஷ்டிப்பின் நாளும் 24 மணி நேரம் கொண்டது என்ற ஆதாரத்தை முன் வைக்கிறது (ஆதி. 2:1-3; யாத். 20:11). ஓய்வுநாளின் அநுசரிப்பு அறிமுகப்படுத்தப்பட்ட போது, ஓய்வுநாளின் புத்துணர்வும், இளைப்பாறுதலுக்குரிய ஆசீர்வாதங்களும் தேவனுடைய திட்டத்தில் திருஷ்டாந்தங்களாக இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டது. ஆயினும், தேவனுடைய உண்மையான ஓய்வு நிரந்தரமானது (எபி. 4:3-11). தேவன் ஒரு வேலையை நிறைவு செய்வதற்கு ஒருநாளுக்குரிய காலஅளவை எடுத்துக் கொண்டார். இது 24 மணி நேரம் கொண்ட நாளல்ல. ஏனெனில், இஸ்ரயேலர்களின் 40 வருடங்கள் கூட "சோதனையின் நாள்" என்று குறிப்பிடுகிறது (சங். 95:8-10). அதே, "யோம்" என்ற எபிரெய வார்த்தை ஆதியாகமத்திலும் "நாள்" என்று பயன்படுத்தப்படுகிறது. அநேக காலத்திற்குப் பின் கிரேக்க மொழியில் "நாள்" என்பது, 1000 வருடங்கள் என்று பேதுரு குறிப்பிடுகிறார் (2 பேது. 3:8).

வேதத்திலுள்ள நம்முடைய விசுவாசத்தை சோதிக்கும்படியாக தேவன் சிருஷ்டித்த விண்வெளி கோள்களை நம்முடைய டெலஸ்கோப்பில் காண்கிறோம். நிச்சயமாக, உண்மையான தோற்றத்தை முன் வைத்து, மாறுபாடானவைகளைச் செய்யக்கூடிய காரியங்களை நம்முடைய பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நாம் விரும்புவதில்லை. இயேசு கற்பித்த கோட்பாடுகளுக்கு இது முற்றிலும் முரணானது என்று தெளிவாகக் காட்டுகிறது (மத். 7:8; சங். 19:1). ஹப்பிள் விண்வெளி டெலஸ்கோப்பின் கணக்கின்படி,

இந்த அண்ட சராசரத்தின் ஆயுசு நாட்கள் 13 பில்லியன் வருடங்களுக்கு மேற்பட்டது.

உயிர், காற்று, நிலம் மற்றும் கடல்கள் தங்களைத் தாங்களே நிலைநிறுத்திக் கொள்வதற்கு இசைந்து செயல்படுத்தும் சூழற்சிகளை ஸ்தாபித்து, அவைகளைப் பராமரிப்பதே சிருஷ்டிப்பின் சவாலான மற்றும் கடினமான கிரியையாக இருக்கிறது. ஒவ்வொரு நாளின் இந்த செயல்பாடுகள் விசேஷித்த இடுக்கண் உடையதாக இருக்கிறது. இவைகள் புவியியல் சம்பந்தமான பதிவுகளில் காணப்படும் தெளிவற்ற துவக்கத்தோடு முக்கியமில்லாததாகத் தோன்றினாலும், வெற்றிகரமான முடிவைக் கொண்டிருக்கிறது. இதில், "சாயங்காலம்" மற்றும் "விடியற்காலம்" அல்லது "இரவு" மற்றும் "பகல்" நியமிக்கப்பட்டதே சிறந்ததாகும். ஒவ்வொருநாளும் 24 மணி நேரத்தைவிட நீண்ட காலப்பகுதி என்பதை நாம் அறிந்திருந்தாலும், சிருஷ்டிப்பின் வாரத்தோடு காணப்படும் ஓய்வுநாள் அநுசரிப்பானது, தேவனுடைய மாபெரும் வேலைக்கு ஒரு குறிப்பான நினைவுகூருதலும் கொண்டாடத்தக்க பண்டிகையுமாயிருக்கிறது.

**முதலாம் நாளுக்கு முன்**

"ஆதியிலே வார்த்தையிருந்தது" (யோவா. 1:1). ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட, "ஆதியலே" என்ற காலத்திற்கு முன்னுள்ள காலப்பகுதி அளவிட முடியாததாகும். அப்போது காலங்கள் துவங்கவில்லை அல்லது கணக்கிடப்படவில்லை என்பதைப் புரிந்துகொள்வதற்கு நமக்குக் கடினமாகவே இருக்கிறது. ஆயினும், தேவன் கிரியை செய்து கொண்டிருந்தார். அப்போது, தேவன் வார்த்தை என்று அழைக்கப்பட்டவரும், ஞானம் என்று அழைக்கப்பட்டவருமான தன்னுடைய ஒரேபேரான குமாரனை ஜெநிப்பிக்கக்கூடிய நேரடியான சிருஷ்டிப்பில் அவர் ஈடுபட்டிருந்தார் (யோவா. 1:1; நீதி. 8:12-31).

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி. 1:1; யோபு 38:7). ஜெநிப்பிக்கப்பட்ட தன்னுடைய ஒரேபேரான குமாரனோடு இணைந்து, தேவனுடைய சிருஷ்டிப்பின் திட்டம் வடிவமைக்கப்பட்டது. அந்த சிருஷ்டிப்பின் வேலைகள் அடிப்படையில் காலம், இடம், மூலப்பொருள் மற்றும் வல்லமையோடு துவங்கியது. காலமும் விண்வெளியும் சிருஷ்டிக்கப்பட்ட மாபெரும் தனித்த செயலை சில நேரங்களில், "பிக் பாங்" என்று அழைக்கப்படுகிறது. "நிலையான ஒரு மாதிரியை" இந்நாளில், ஒரு காகித தாளில் சமநிலையின் தொகுப்புகளோடு நாம் துவங்கினால், ஒவ்வொரு பால்வெளி மண்டலமும் ஒன்றைவிட்டு மற்றொன்று பிரிந்து செல்வதை முன் கூட்டியே அறிவிக்கிறது. அதில் கணக்கிடப்பட்ட விகிதங்கள் ஹைட்ரஜன், ஹீலியம் மற்றும் லித்தியம் அளவானது, அண்டசராசரத்தில் காணக்கூடிய பொருட்களின் 97% கொண்டுள்ளது.

இவைகள் சிறிதளவிலான அளவுகள் அல்லது மதிப்புகளில் மாற்றம் ஏற்பட்டால், இந்த அண்டசராசரத்தில் காணப்படும் இடம், காலம், சக்தி மற்றும் திடப்பொருட்கள் அனைத்தும் ஒன்றோடொன்று மோதி ஜீவிக்கக்கூடிய சூழ்நிலை அற்றுப்போய்விடும். இந்த உலகத்தின் முன்னணியில் இருக்கும் விண்வெளி ஆராய்ச்சியாளர்களின் கணிப்பின்படி, இப்படிப்பட்ட மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில் அனைத்தும் தப்பிப்பதற்கு சிறிதளவு கூட வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது.

மேலும், விநோதமான ஜீவிகள் மற்றும் அற்புதமான சிருஷ்டிப்புகள் (தூதர்களைப் போல) காணப்படுவதில்லை என்ற முடிவுகள் ஞானமற்றதாக இருக்கும்!

"பிக் பாங்கைத்" தொடர்ந்து, பொருட்கள் ஒன்றோடொன்று இணைந்து, குறுகிய கால நட்சத்திரங்கள் மூலப்பொருளிலிருந்து முற்றிலுமாக வேறுபட்டு உருவானது. நீண்ட காலமாக எரிந்துக் கொண்டிருக்கும் சூரியனைப் போல இவைகளில்லை. இந்தச் சூழ்நிலையில் உருவான நட்சத்திரங்கள் லித்தியம்மைக் காட்டிலும் கணமுள்ள மற்ற 89 இயற்கையான மூலப்பொருள் உருக்கக்கூடிய தொழிற்சாலையாக செயல்பட்டது. கிட்டத்தட்ட ஐந்து பில்லியன் வருடங்களுக்கு முன் விண்வெளியில் வேகமாக விசையுடன் எரியப்பட்ட இந்த நட்சத்திரங்களின் திடீர் அழிவின் (அதிக ஒளிவிட்டு) விளைவாக வாயுக்களும், சாம்பல்களும் உருவாக்கப்பட்டது. புவி ஈர்ப்பு சக்தியின் கீழ் சிதறடிக்கப்பட்ட இந்த நட்சத்திரங்களின் துகள்கள் மீண்டும் ஒன்றிணைந்து நம்முடைய சூரியனாகவும், பூமியாகவும் உருவெடுத்தது. இப்படியாக, உருவான பூமியானது, நீர் நிறைந்த சிறு கிரகம் போல, அதிகபட்சமான பொருட்கள் காணப்பட்டது. இவைகள் அனைத்தும் மெதுவாகக் குளிர்ந்தது.

இந்தச் சூழ்நிலையில், இந்தப் பூமியை குடியிருப்புக்கு ஏற்றவிதமாக மாற்றுவதற்கு அரிதான புள்ளிவிவரம் கொண்ட ஒரு சங்கடமான, சவாலான சம்பவம் நிகழ்ந்தது. செவ்வாய் கிரகம் அளவைக் கொண்டுள்ள ஒரு கோள் பூமியில் மோதியது. அதிலிருந்து தெரித்தப் பகுதி நம்முடைய சந்திரனாக உருவானது. இந்தப் பிரளயத்திற்கு சாட்சி

கூறும்வகையில் சந்திரனில் காணப்பட்ட இந்தப் பாறைகள் விண்வெளிப் பயணிகள் அங்குச் சென்று தோண்டிப் பார்க்கும் வரையில் அசையாமல் இருந்தது. இந்த ஆதாரமற்ற அனுமானங்களைத் தொடர்ந்து சுமார் 50 வருடங்கள் கவனிக்கப்பட்டு வந்தது. மேலும், கடந்த 2013-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் பேராசிரியர் சாரா ஸ்டீவாட் என்பவர் குறிப்பிடும்போது, சந்திரனின் உருவாக்குதல் உண்மை போல் தோன்றினாலும், "தேவைப்படும் சம்பவங்களின் வரிசை மிகக் குறைவாகக் காணப்படுகிறது." விஞ்ஞானம் பார்க்குமிடமெங்கும் மீண்டும் ஒருமுறை தேவனுடைய தொழில்சிறந்த கரம் காணப்படுகிறது!

பூமி குளிர்ந்திட ஒரு கடல் தேவைப்பட்டது. கிட்டத்தட்ட விண்வெளி (கடல் உட்பட) முழுவதும் திட நிலையிலிருக்கும் பூமியிலிருந்தே உருவாக்கப்பட்டது என்று ஏல் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜேம்ஸ் சி.ஜி. வாக்கர் கூறுகிறார். இது, யோபின் வார்த்தைகளோடு இசைந்திருக்கிறது, "கர்ப்பத்திலிருந்து உதிக்கிறதுபோல் சமுத்திரம் புரண்டுவந்தபோது, அதைக் கதவுகளால் அடைத்தவர் யார்" (யோபு 38:8-11)? தெய்வீக தூண்டுதலின்றி இந்த அற்புதமான விவரங்கள் நமக்கு தலைமுறை தலைமுறையின் வழியாக எவ்வாறு கொடுக்கப்பட்டிருக்க முடியும்? 21-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் இந்த பார்வைக்குச் சவாலாக விஞ்ஞான சமுதாய மட்டுமே எதிர்த்தது. நுரையும் வெற்றிடமும் இல்லாமல் கடலோடு காணப்பட்ட இந்த பூமி, உயிருள்ள சிருஷ்டிகள் உருவாக்கப்படுவதற்கு ஆயத்தமானது.

**முதல் நாள்**

"தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்" (ஆதி. 1:2). துவக்கத்தில் கடலில் தோன்றின உயிரினங்கள் வெளிச்சத்தைச் சார்ந்திருக்கவில்லை என்று வேதாகமத்தில் கூறப்படுகிறதற்கு இசைவாக எல்லா பூமியின் பௌதீக இயல் ஆதாரம் அளிக்கின்றது. கண்டங்களைக் காட்டிலும் பழமையான பாறைகள் இதற்கான ஆதாரங்களை வைத்திருக்கிறது. இந்த உலகத்தில் காணப்படும் அதிகபட்சமான இரும்பு இதற்குரிய ஆதாரங்களைக் காட்டுகிறது. மீண்டுமாக, வெளிச்சமில்லாமல் ஜீவன் தோன்றியது என்ற இந்த அற்புதமான விவரம் தூண்டுதலின்றி நமக்கு எப்படிக் கொடுக்கப்பட்டது?

"தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று" (ஆதி. 1:3). சூரியன் நீண்ட காலமாக இருந்தாலும், இந்நாள் வரைக்கும் "பல மடிப்புகளுள்ள" அடர்த்தியான மேகங்களைப் போல மூடும் பொருள் கடலின் மேல் காணப்படுகிறது (யோபு 38:9). பூமியின் ஆகாயவிரிவைக் குறித்த துவக்க ஆராய்ச்சிகள் இந்தப் பல மடிப்புகளுள்ள கட்டுகளைக் குறித்து முன் அறிவித்துள்ளது. ஆகாயவிரிவு மற்றும் பூமியைச் சுத்தம் செய்யக்கூடிய வேலைகள் தொடர்ந்து செய்யப்பட்ட போது, நீர் வாழும் தாவரங்கள் கடலில் உருவானது.

இந்தப் பூமி சூரியனிலிருந்து ஒரு சாதகமான தூரத்தில் வைக்கப்பட்டுள்ள காரியம் தனித்துவமானது. இந்தப் பூமி சூரியனுக்கு 4% அருகிலிருந்தால், பனிக்கட்டிகள் கடல்களாக உருகுவதற்கு வாய்ப்பில்லை.

இந்தப் பூமி வீனஸைப் போல ஒரு ஜீவனற்ற நிலையில் இராதபடிக்கு, ஆபத்தான நிலையிலிருந்து தப்பித்தது. இந்த ஒரு அபாய நிலையைத் தாண்டின பின்னே உயிரினங்கள் தோன்றும்படியாக வடிவமைக்கப்பட்டது. டாக்டர் மைக்கேல் ஹார்ட் கொடுத்த ஒரு பிரபலமான குறிப்பில், சிருஷ்டிப்பின் கர்த்தருக்கு எந்தவிதமான மதிப்பையும் கொடுக்காமல், "ஒரு குருட்டு அதிர்ஷ்டம்" என்று அவராகவே ஒரு பெயரை வழங்கினார்.

**இரண்டாம் நாள்**

"பின்பு தேவன்: ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது" (ஆதி. 1:6-8). ஆர்கிபாக்டீரியாவுக்கு ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டது. கடலின் மேற்புறத்தில் பாசி வளர்ச்சியடையத் துவங்கியது. அதற்கு வெளிச்சமும் கிடைத்தது. அப்போது, ஆகாய விரிவு தொடர்ந்து பிராணவாயுவை சேமிக்கத் துவங்கியது. இந்த செயல்பாடுகள் ஆர்கிபாக்டீரியாக் களை அழிக்குமளவுக்கு எதிரான செய்கையாக இருந்தது. நாம் அனைவரும் சுவாசிக்கத்தக்கதாக பிராணவாயு உருவாக்கப்படக் கூடிய இந்த மிகப்பெரிய தொடர் வேலையைப் புரிந்துகொள்ள அநேக காரியங்கள் செலவழிக்க வேண்டியதாக உள்ளது. ஆனால், தெய்வீக திட்டத்தில் ஆதியில் செயல்பட்ட ஆர்கிபாக்டீரியாக்கள் தங்களுடைய வேலைகளை முடித்து முதன்மையான இடத்திலிருந்து ஓய்வு பெற்று ஆழமான எரிமலை கடல்களுக்குள் பிரவேசித்தாலும், பூமியின் பாதியளவு உயிரினங்கள் அவைகளே.

"ஆகாயவிரிவானது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றார்." பூமியைச் சுற்றி மூடியிருந்த அடர்த்தியான மேகங்களும், மூடுபனியும் ஆகாயவிரிவு உருவான போது, தெளிவாக்கப்பட்டது. 1970-ம் வரைக்கும் பூமியில் ஆகாயவிரிவைப் பற்றிய ஆராய்ச்சிகளைக் குறித்து

விஞ்ஞானிகள் தெளிவாகக் குறிப்பிடவில்லை. ஆனால், ஆச்சரியமூட்டும் வகையில் துல்லியமான மாற்றங்களை வேதாகமம் குறிப்பிடுகிறது. மீண்டுமாக, 3000 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட காரியங்கள் இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சிகளோடு ஒத்துக்காணப்படுகிறது.

### மூன்றாம் நாள்

"பின்பு தேவன்: வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார்" (ஆதி. 1:9). இப்பொழுது சீராக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கண்டங்களின் சுழற்சி, துவக்கத்தில் காணப்பட்ட கண்டங்களின் அளவுகளோடு துல்லியமாகக் காணப்படுவதில்லை. ஏனெனில், பல இடங்கள் ஒதுக்கப்பட்டும் பல இடங்கள் புதுப்பிக்கப்பட்டும் உள்ளது. "தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும் முளைப்பிக்கக்கடவது என்றார்" (ஆதி. 1:11). புல் பூண்டுகள் முளைப்பிக்கக்கடவது என்று முதலில் முளைத்த தாவரங்களைக் குறித்து வேதாகமம் கூறுகிறது. தாவர சாஸ்திர ஆய்வாளர்கள் இந்தப் பூமியில் தோன்றின முதல் புல்லுகளை, "கூக்சோனியா" என்று அழைத்தார்கள். இவைகள் இந்நாளில் காணப்படும் புல்லுகளைப் போல இராவிட்டாலும், துளிர்களைப் போல் இருந்தது. புல்லுகள் குறைவான கரியமில வாயுக்களை உட்கொண்டு பிராணவாயுவைக் கொடுத்தது. விரைவாக அதைத் தொடர்ந்து காடுகளும், வனங்களும் உருவானது. காலப்போக்கில் அவைகள் இந்தப் பூமிக்குள் நிலக்கரிகளாக மாறியது.

### நான்காம் நாள்

"பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது என்றார்" (ஆதி. 1:14). ஆதியாகமம் 1:1-ம் வசனத்தில் சொல்லப்பட்ட, "வானமும், பூமியும்" சூரியன் சந்திரன் உட்பட்டதாக இருக்கிறது. பூமியின் மேல் உள்ளவர்கள் அவைகளைக் காணும் முன்னே (நீண்ட காலமாக) செயலாற்றிக் கொண்டிருந்தது. அதுவரைக்கும் கூட மேகங்களினால் அவைகளில் வெளிச்சம் ஒரு பகுதி தடைப்பட்டிருந்தது. அந்தத் தடைகள் இரண்டாம் நாளின் துவக்கத்தில் தெளிவாகத் துவங்கியது. (ஆசிரியரின் குறிப்பு :- ஆகாய விரிவின் அழுத்தம் கிட்டத்தட்ட 10 வளிமண்டலங்கள் குறையும் வரையில் சூரியனும் பகுக்கப்படாமல் இருந்திருக்கும்).

நம்முடைய சூரியன் ஒரு சராசரி நட்சத்திரமாகக் காணப்படுகிறது. ஆயினும், உயிரினங்கள் தோன்றுவதற்குச் சாதகமான ஒரு கோள் இருப்பதினால் சூரியன் 17% விட குறைவாகவும் அல்லது 10% விட பெரிதாகவும் வாய்ப்பில்லை என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். கூடுதலாக நம்முடைய பால்வெளி மண்டலத்தில் ஒரு சாதகமான இடத்தில் (மத்திய) சூரியன் அமைக்கப்பட்டிருக்கிறது. அருகாமையிலுள்ள நட்சத்திரங்கள் அழியும் போது வெளிவரும் தீவிரமானதும், ஆபத்தானதுமான கதிர்வீச்சுகளிலிருந்து தன்னைக்காத்துக் கொள்வதற்கு இந்த நிலை சூரியனுக்கு மிகவும் பாதுகாப்பாக உள்ளது. நம்முடைய பால் மண்டலத்தில் உயிர் வாழத்தக்க பல்லாயிரக் கணக்கான கோள்கள் உள்ளது என்று 1970-ல், விண்வெளி ஆராய்ச்சியாளர் கார்ல் ஸாகன் அளவிட்டார். இன்று நம்முடைய முழு பால் மண்டலத்தில் பூமி மட்டுமே உயிர்வாழ்வதற்கு ஏற்ற தனித்துவமான கோள் என்று பேராசிரியர் பென் ஸக்கர்மேன் கருதுகிறார்.

மற்ற கோள்களின் சந்திரனைக் காட்டிலும், நம்முடைய பூமியின் சந்திரன் சற்று பெரியது என்பது குறிப்பிடத்தக்கது. மற்ற கோள்களில் சந்திரன்கள் அதன் கோள்களைக் காட்டிலும் மிக அற்பமான நிறுவையைக் கொண்டுள்ளது. இது ஒரு முக்கியமான தொடர் செயலுக்கு வழி நடத்துகிறது. நம்முடைய பூமி - மற்றும் சந்திரனின் சக்தி மிக உறுதியான புவிஈர்ப்பு தாக்கத்தை பூமியில் ஏற்படுத்தியிருக்கிறது. இருக்க வேண்டிய அளவைக்காட்டிலும் நூறுமடங்கு அதிகரித்துக் காணப்படுகிறது. இந்த காந்தசக்தி கண்ணுக்குத் தெரியாத ஒரு காற்று மண்டலம் போல இந்த பூமியைச் சுற்றியிருக்கிறது. இந்தப் படலமானது, உயிரினங்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் சூரியனிலிருந்து எப்போதும் வெளியே வந்து கொண்டிருக்கும். எந்த கதிர்களோ, விஷ வாயுக்களோ பூமிக்குள் நுழையாதபடிக்குக் காத்துக்கொண்டு வருகிறது.

பூமி - சூரியன் - சந்திரன் - இவைகளிடையில் காணப்படும் மிக முக்கியமான ஒத்த செயல்கள் இதோடு முடிவடைவதில்லை. ஒருங்கிணைந்த இவைகளின் செயல்பாடானது, தொடர்ந்து பூமிக்கு மேல் காணப்படும் அந்தப் படலங்கள் பழுதடைந்து போகும் போது, பூமியின் ஆழங்களில் அடைக்கப்பட்டிருக்கும் வாயுக்கள் அந்தப் படலங்களுக்குப் பதிலாக மாற்றி அமைகிறது. பொதுவாக, புதிதான தாதுக்கள் பூமியின் மேல்பரப்புக்குக் கொண்டுவந்து புதிய மண்ணை பலனாகத் தருகிறது. எரிமலையினால் தொடப்பட்ட

சாம்பல்கள் மண்ணின் வளத்தை மேம்படுத்துகிறது. நான்காம் நாளின் பெர்மியன் காலப்பகுதி விதிவிலக்கானது.

"திரவ நிலையில் ததும்பிக் கொண்டிருந்த பூமியின் உள் மையப்பகுதி, இந்த யுகத்தோடு முடிவு அடைந்தது" என்று பாரீஸ் குளோபல் நபிஸிக்ஸ் ஆராய்ச்சியாளராகிய கிரிப்-லெப்ட்ஸ் தன்னுடைய எழுத்துக்களை வெளியிட்டார். இந்த சக்திகள் இக்காலத்து மதிப்புகளோடு கணக்கிட்டுப் பார்க்கும்போது, 10000 அதிரொலி பெருக்கம் காணப்பட்டுள்ளது. இக்காரியமானது, "பழைய வாழ்க்கையின்" பல உயிரினங்கள் அழிந்துபோனது. நான்காம் நாளைத் தொடர்ந்து வந்த காலத்தில் இந்த அதிர்வுகள் முடிவடைந்து, ஒரு நிலையான பாதையை சந்திரனுக்கு வழி வகுத்தது.

இந்தக் காலத்தைத் தொடர்ந்து மரங்களின் இலைகள் உதிர்ந்து பருவத்திற்கு ஏற்றவாறு வளர்ச்சியடைந்து, ஜீவனுள்ள உலகத்தின் ஒரு முக்கிய பகுதியானது. இப்போது காட்சியளிக்கும் பூமியானது, உயிரினங்கள் வேறுபட்டதாக இருந்தாலும் கெட்டியானதாக இருப்பதுபோல அந்நாளிலும் காணப்பட்டது. இந்தப் பூமியின் மேல் ஜீவனுக்குரிய வாய்ப்புகள் ஏற்படுத்துவதற்கு இரண்டு மிகச் சிறந்த வல்லமைகளாகிய சூரியனும், சந்திரனும் பற்றி குறிப்பாக வேதாகமம் கூறுகிறது.

**ஐந்தாம் நாள்**

"தேவன், மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர்வாழும் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதிஜாதியான சகலவிதப் பட்சிகளையும் சிருஷ்டித்தார்" (ஆதி. 1:21). ஆதியாகமத்தை எழுதின ஆசிரியரை டைனோசரசை வசியப்படுத்தினது போல, நம்மையும் அது வசியப்படுத்தியுள்ளது. ஏறக்குறைய அனைவரின் கற்பனையின்படி ஒரு காலத்தில் இந்தப் பூமியை ஆட்சி செய்து வந்த இவைகளின் பராக்கிரமமான உருவங்கள் பயமூட்டுகிற இராட்சதர்களைப் போல் இருந்தது. இவைகள் ஐந்தாம் சிருஷ்டிப்பின் யுகத்தின் மிருகங்களாக இருந்தது. இவைகளை எபிரெயர்கள் விவரிப்பதற்கு அச்சமூட்டும் வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள். "பெரிய பயங்கர ஜந்து," " நீர் வாழ்ஜந்து" மற்றும் "சிறகுள்ள ஜந்துக்கள்" (திமிங்கலம் என்ற மொழிபெயர்ப்பு தவறானது).

மற்ற தொடர் சம்பவங்கள் சுழற்சி முறையில் செயல்பட்டுக் கொண்டிருந்தது. பூக்களும், பூத்துக்குலுங்கும் மரங்களும், நாம் உண்ணக்கூடிய கனிகளைக் கொடுக்கும் சகலவிதமான கனிமரங்களும், நவீன புல்லுகளும், சிறிதளவில் கரியமில வாயுவைப் பயன்படுத்திக் கொண்டிருந்தவைகள் காலப்போக்கில் பூமி முழுவதிலுமுள்ள கரியமில வாயுவை உட்கொள்ள துவங்கியது. இந்த புல்லுகளிலிருந்து நாம் உண்ணக்கூடிய சகலவிதமான தானியங்களும் முளைக்கிறது. முதன்முறையாக பாலூட்டிகளுக்கும், பறவைகளுக்கும் அதிகமான சத்துக்களைக் கொடுக்கக்கூடிய செடிகளை முளைப்பிப்பதற்கு இந்தப் பூமி ஆயத்தமானது. இந்த முக்கியமான வேலைகள் முடிவடைந்த போது, டைனோசரசின் உலகம் திடீரென்று முடிவுக்கு வந்தது. உலகளவில் ஏற்பட்ட ஓர் பேரழிவே இதற்குக் காரணம் என்று விஞ்ஞான சமுதாயம் நம்புகிறது. இப்படிப்பட்ட இந்த கோர சம்பவம் மிகவும் அதிர்ச்சியளிக்கிறதாக இருந்ததினிமித்தம் விஞ்ஞான சமுதாயத்திற்கு இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வதற்கு தாமதமானது. வால்ட்டர் அல்வார்ஸ் மற்றும் 1980-ம் வருடத்தில் நோபிள் பரிசைப் பெற்ற லூயிஸ் அல்வார்ஸ் இந்த கருத்தை முன் வைத்தப் போதுதான் அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள். மிகப்பெரிய டைனோசரசுகள் அழிந்து போனாலும், அனைத்து டைனோசரசும் அழிந்து போகவில்லை என்பது சர்ச்சைக்குரியதாக இந்நாள் வரைக்கும் காணப்படுகிறது.

பறவைகள் மற்றும் சிறகுள்ள பறவைகள் அனைத்துமே, டைனோசரஸ் தான். ஆகவே, டைனோசரஸ் இன்றும் முழுமையாக அழியவில்லை என்று கூறப்படுகிறது. இந்த டைனோசரஸின் உலகத்தின் கதைகள் மற்றும் டைனோசரஸ் நம்மை மகிழ்விப்பதற்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறது. பறவைகள் கூட்டமாகப் பறந்து செல்வதை மாலை நேரங்களில் காணும் போதும், வயலில் பூக்களையும், சாலையோரத்திலிருக்கும் மரங்களையும் காணும் போதும் மனதிற்கு எவ்வளவு இன்பமாக இருக்கிறது. தேனை ருசிக்கும் போதும், பழங்களை உண்ணும் போதும், கோதுமையிலிருந்து செய்த அப்பங்களைப் புசிக்கும் போதும், நவீன மிருகங்களுக்கு ஆயத்தமான ஓர் உலகமாக நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**ஆறாம் நாள்**

"தேவன்: பூமியானது ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டுமிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டுமிருகங்களையும், ஜாதிஜாதியாகப் பிறப்பிக்கக்கடவது என்றார்" (ஆதி. 1:24). முதல் ஐந்து சிருஷ்டிப்பின் காலங்களின்


வளமான வேலைகள் தொடர்ந்து பிண்ணி பிணைந்திருக்கும் அநேக வாழ்க்கை சக்கரங்களை வெற்றிகரமாக உருவாக்க வாய்ப்பளித்தது. இந்தச் சூழற்சியான சுற்றுகள் ஆகாயவிரிவையும், வெப்பநிலையையும், ஜீவனுக்குத் தேவையான சகல இரசாயன பொருள்களையும் பராமரித்துக் கொண்டு வருகிறது. பொதுவாக, நம்முடைய கவனத்திலிருந்து தப்பிப் போகும் சிறிய ஜீவன்களும், பூச்சிகளும் நமக்குத் தொல்லையாக இருந்தாலும், பூமியில் மிகப்பெரிய அளவிலான உயிரினங்களாக கணக்கிடப்படுகிறது. ஆயினும், பாலுண்ணிகளைப் போல, இந்த ஜந்துக்களோடு நமக்கு எந்தவிதமான உறவுகளையும் உணர முடிவதில்லை. இந்த ஆறாம் நாளில், சகலவிதமான, பிரபலமான பாலுண்ணிகளும் இந்தப் பூமியின் மேல் முக்கியமாகக் காணப்பட்டது.

"தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" (ஆதி. 1:26). இந்தப் பூமி உயிரினங்களை சிருஷ்டிப்பதற்குத் தேவையான சகல காரியங்களோடு ஆயத்தமானது. மேலும், சிருஷ்டி கர்த்தாவைப் புரிந்துகொள்வதற்கும் ஆயத்தமானது. இங்கு, விஞ்ஞானத்தின் கோரிக்கைகளுக்கும், வசனங்களின் அதிகாரத்துக்கும் முரண்பாடுகள் ஏற்பட்டது. மனிதன், ஓரணு பிராணியிலிருந்து, படிப்படியாக வளர்ச்சியடைந்தான் என்ற கூற்றோடு வேதாகமம் ஒத்துப்போகிறதில்லை. இந்தப் பூமியின் மேல் உதார குணமுள்ளவனாக ஆட்சி செய்வதற்கு தேவன் மனுஷனை பாவமற்றவராகவும், பரிபூரணராகவும் சிருஷ்டித்தார் என்ற எளிமையான வாக்கியத்தின் மேல் நம்முடைய நம்பிக்கையைச் சுமத்தியிருக்கிறோம். பரிதாபம் இந்தப் பேரானந்தம் நீடிக்கவில்லை. இந்தக் கதையின் மீதியுள்ள பாகம் வேதாகமத்தின் மீதியுள்ள அதிகாரங்களில் காணப்படுகிறது.

## ஆயிரமாண்டு விடியல்

எல்லா செயலும் முன்னே செல்லும்!
ஆசீர் வாதக் காலம் துவங்கும்!
பொன்னாலான மணிகள் ஒலிக்க,
பழையன கழியவும் புதியன புகவும்,
சங்கீத ஜதியின் தாளகதியில்
பகட்டாய் ஜொலிக்கும் ஆரவாரங்கள்
படபடவெனவே பறந்துபோகும்:
பெரும் கூட்டமாகவே அகன்று ஓடும்!
இருண்ட கொள்கை மறையத்துவங்கும்,
ஆதார பெலனும் அற்றே போகும்!
விளக்கு வெளிச்சம் மலைமேலே !
சத்தியம் போகுது அதன் பாலே!
சூரியன் முன்பனி மறைவதுபோல்
வல்லமைக்கெதிராய் வரலாற்றுக் காட்சி
நிற்கவொட்டாமல் நிழலாகத்
தேய்ந்தே மறைந்தே பறந்திடுதே!
யாருக்காகக் காத்திருப்பு?
அண்ணா, அக்கா, ஏன் மறுப்பு?
தங்கப்பழங்கள் உனக்காக:
கருக்கலில் எழுவாய் சூரியனே!
பாவலனுக்கேன் இந்த துக்கம்?
பாடகனுக்கேன் இந்த மௌனம்?
ஓவியனுக்கேன் இந்தத் தயக்கம்?
உயர் வானத்தின் வண்ணத்தைத் தீட்ட?
வைகறைப் பொழுதில் துயிலெழுவாய்!
சூரிய உதயம் கண்டிடுவாய்.
நண்பகலுக்காய் காத்திராமல்
ஆரம்பம் காண விழையாதே!
அனைத்தும் அதினதின் பாதையிலே
அழகாய் முன்னேற்றம் காண்கிறதே.
ஆசீர்வாதக் காலங்கள் ஆரம்பமாகும் வழியைவிடு.
பழையன வேகமாய் பறக்குதுபார்,
புதியன உள்ளே வருகுது பார்.
பரலோக வெளிச்சம் விரிகிறது,
அரசரின் ஆணைக்கு அடிபணிகிறது!
மகிமைக்குள்ளாய் பரந்து விரியும்,
தேசத்தினூடே விரைந்து பரவும்.
மூடநம்பிக்கை தாழ இறங்கி,
தளர்ந்து தோய்ந்து மறைந்தே போகும்.
தொடரும் விடியலின் சூரிய ஒளியில்
நாமும் காண்போம் நல்வழி ஒன்று!
செய்யும் பணிகள் ஆயிரமிருக்குது,
செய்ய வேண்டியே ஆயத்தப் படு!
வேலையாட்கள் கொஞ்சமிருக்குது,
காலை மாலை கடுமையாய் உழைக்குது.
அறுவடை செய்ய கட்டளை பிறக்குது,
விடியலில் அறுவடை ஆரம்பமாகுது.
விளைந்த நிலங்களில் அறுவடைகள்,
கடுமையாய் உழைப்போம் உரிமைக்காய்!

# கர்த்தரே என் தேவன்



Chris Kuenzli

"ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையம் பூமியையும் உண்டாக்கினீர்; உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை" (எரே. 32:17).

முழு அண்டசராசரத்தையும், பூமியையும் அதில் வாழும் சகல உயிர்வாழும் ஜந்துக்களையும், தாவரங்களையும் சிருஷ்டித்த சிறந்த ஞானமுள்ள சிருஷ்டிகர் ஒருவர் உண்டு என்பதை நாம் நம்புவதினால், அடுத்தபடியாக, அப்படிப்பட்ட ஆச்சரியமுள்ள தேவன் மேல் நம்முடைய விசுவாசத்தை வளர செய்வதற்கு அவருடைய குணங்களைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். தேவனுடைய குணாதிசயங்களைப் புரிந்துகொள்ளுதலானது, அவருடைய திட்டங்களையும், ஒவ்வொரு மூலக்கூறுகளுக்கும் பின்னணியிலுள்ள நியாயமானக் காரணங்களை அறிந்துகொள்ள வழிநடத்தும். தேவன் நீதியும், வல்லமையும், ஞானமும், அன்பும் உள்ளவர் என்று வசனங்கள் குறிப்பிடுகிறது. "நீதியும் (நீதியான வல்லமை) நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்; கிருபையும் சத்தியமும் (ஞானம்) உமக்கு முன்பாக நடக்கும்" (சங். 89:14). தேவன் மனுக்குலத்தோடு தொடர்பு கொள்கையில் இந்த நான்கு குணங்களும் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

**நீதியுள்ள தேவன்**

நீதியும் (நீதியாக நடப்பது), நியாயமும் (நீதியுள்ள வல்லமை), தேவனுடைய சிங்கானசனத்தின் (அதிகாரம்) ஆதாரம் என்று சங். 89:14-ல் கூறுகிறது. இந்தக் குணங்களை அடிப்படையாகக் கொண்டே தேவன், தம்முடைய சகல சிருஷ்டிகளோடு தொடர்பு கொள்கிறார். இது, உபா. 32:4-லும் ஊர்ஜிதப்படுத்தப்படுகிறது. "மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக் கிறதைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்" (எரே. 9:24) என்று எரேமியா கூறுகிறார். அவருடைய கிரியைகளும், வழிகளும் பூரணமானதும், நீதியும், நியாயமுமானவைகள். இந்தப் பூமியின் மேல் நீதியான நியாயத்தீர்ப்பை வழங்குவது, தேவனுடைய மகிழ்ச்சியாக இருக்கிறது என்று தீர்க்கதரிசி கூறுகிறார்.

மனுக்குலத்திற்காக தேவனுடைய திட்டத்தில், தேவன் வெளிப்படுத்தும் நீதிக்கும் பரிபூரணமான நியாயத்திற்கும் போதுமான அளவிற்கு ஆதாரங்கள் உண்டு. ஒரு எடுத்துக்காட்டாக:- தந்தையாகிய ஆதாம் பூரணமாக இருந்தபோது, அவர் மேல் தேவன் கொடுத்திட்ட தீர்ப்பு. தேவனுடைய சிருஷ்டிப்பில் ஆதாம் பூரண மனுஷனாக இருந்தார் (ஆதி. 1:31). ஏதேன் தோட்டத்தில் நித்தியமாக ஜீவிக்கக்கூடிய சகலவிதமான தகுதிகளையும் தேவன் தெளிவாக ஆதாமுக்குக் கற்பித்திருந்தார். "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதி. 2:16-17). ஆதாமின் கீழ்ப்படியாமையினால், அவர் மேலும், அவருடைய சந்ததிகளின் மேலும், மரண தீர்ப்பு வந்தது. இந்தத் தீர்ப்பின் நீதி தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. ஆதாமுக்கு, இந்த நித்தியஜீவனை, தேவன், ஒரு பரிசாகத் தந்தார். அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, பெற்ற நித்தியஜீவனை மதிப்பறிந்து நடப்பாரா? என்று தேவன் கவனித்தார். ஆதாம், தேவனுடைய கற்பனையை மீறி, ஜீவிக்கக்கூடிய உரிமையை இழந்தார் (ரோ. 6:23; எசே. 18:4). அநேகர், மனுக்குலத்தின் மேல் கொடுக்கப்பட்டுள்ள தீர்ப்பை நித்திய உபத்திரவம் என்று திரித்துக் கூறுகின்றனர். இந்தக் கருத்து வசனங்களோடு ஒத்துப் போவதில்லை. மேலும், தேவனுடைய பரிபூரண நீதியோடு இது பொருந்துவதுமில்லை. தனிப்பட்ட ஒரு நபரின் பாவத்திற்காக வாழ்நாள் முழுவதும் நிரந்தரமான உபத்திரவங்களை அனுபவிப்பது தேவனுடைய நீதியில் காணப்படுவதில்லை. "ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை" (யாத். 21:23-25).

கூடுதலாக, தேவனுடைய நீதியை மோசேயின் நியாப்பிரமாணத்தில் காணலாம். "நியாயவிசாரணையிலும், அளவிலும், நிறையிலும், படியிலும் அநியாயம் செய்யாதிருப்பீர்களாக. சுமுத்திரையான தராசும், சுமுத்திரையான நிறைகல்லும், சுமுத்திரையான மரக்காலும், சுமுத்திரையான படியும் உங்களுக்கு

இருக்கவேண்டும்; நான் உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர். ஆகையால் என்னுடைய கட்டளைகள் யாவையும் என்னுடைய நியாயங்கள் யாவையும் கைக்கொண்டு, அவைகளின்படி நடக்கக்கடவீர்கள்; நான் கர்த்தர்" (லேவி. 19:35-37). இன்று வழக்கமாக மனுஷன் நீதியைத் தவறான வழியில் பயன்படுத்துகிறான். அவன் மதத்தையும், இனத்தையும், வல்லமையையும், பொருளாதாரத் தையும் பயன்படுத்தி மற்றவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்த வகைத்தேடுகிறான். தேவனுடைய பரிபூரண நீதியின் கோட்பாடுகள் இன்றைய சமுதாயத்தில் புறக்கணிக்கப்படுவதைத் தெளிவாகக் காணலாம். ஆனாலும், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் தேவனுடைய நீதி நிலையாக நிற்கும் என்று அவர் வாக்களித்திருக்கிறார் (ஏசா. 28: 16-17). அப்போது, தேவனுக்கு முன் அனைவரும் நீதியுள்ள வாழ்க்கையை வாழும்படியாக, அக்காலத்திற்குள் தேவனுடைய நீதி மனுக்குலத்திற்குக் கற்றுக்கொடுக்கப்படும் (ஏசா. 26:9).

தேவனுக்குப் பணி செய்ய தேடும் ஒவ்வொருக்கும் நீதியிலும், நியாயத்திலும் பயிற்சிப் பெறுவதே அடிப்படையான தேவையாக உள்ளது என்று நீதி. 21:3-ல் கூறுகிறது. "பலியிடுவதைப்பார்க்கிலும், நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்." நாம் தேவனுக்குக் காணிக்கையைச் செலுத்துவதற்கு முன் மற்றவர்களிடத்தில், விசேஷமாக விசுவாச வீட்டாரிடத்தில் நாம் நேர்மையுள்ளவர்களாகவும், உத்தமர்களாகவும் நிரூபிப்பது மிக அவசியம். இப்படிப்பட்ட நேர்மையையும், நியாத்தையும் நம்மால் இயன்றவரைக்கும் நடப்பிப்பதின் வழியாக தேவனுடைய நியாயமான நீதியைப் பின்பற்றலாம்.

**ஞானத்தின் தேவன்**

"கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது" என்று (சங். 104:24)ல் கூறுகிறது. தேவனுடைய சகல கிரியைகளும், தேவனுடைய ஞானத்தினால் நடைப்பெற்றது என்று சங்கீதக்காரர் கூறுகிறார். இது சிருஷ்டிப்பின் வேலைகளை மட்டுமல்ல, மனுக்குலத்தின் இரட்சிப்புக்காக ஏறெடுக்கப்படும் சகல காரியங்களும் இதிலடங்கும். தேவன் தம்முடைய கிரியைகளில் வெளிப்படுத்தியிருக்கும் ஞானத்தைக் காட்டிலும் அதிகமான காரியங்களை இதுவரைக்கும் மனுஷன் கண்டதுமில்லை. "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது" (ஏசா. 55:8-9).

தேவன் தம்முடைய திட்டத்தின் வளர்ச்சிக்காக, அவருடைய ஞானத்தை எவ்வாறு பயன்படுத்துகிறார் என்று ஏசா. 46:9-10 வசனங்கள் ஒரு மேற்பார்வையிட்டிருக்கிறது. "நானே தேவன், வேறொருவரும் இல்லை; நானே தேவன், எனக்குச் சமானமில்லை. அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாத வைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்." தேவனுடைய ஞானத்தில் முன்னறிவு உள்ளது. அதாவது, இனி நடக்கக்கூடிய காரியங்களை அவர் நன்கு அறிந்திருக்கிறார். இந்த ஒரு காரியத்தைப் பயன்படுத்தி, தம்முடைய அறிவுள்ள சிருஷ்டிப்புகளுக்கு தம்முடைய நீதியையும், நியாமுமுள்ள கோட்பாடுகளை வெற்றிகரமாகக் கற்றுக்கொடுப்பதற்குப் பயன்படுத்துகிறார். இதோடுகூட அவர் தங்களுடைய சுயாதீனத்தைப் பயன்படுத்தவும் தேவன் அனுமதிக்கிறார்.

தேவனுடைய திட்டத்தில் அவருடைய தெய்வீக ஞானத்தை எடுத்துகாட்டுவதற்குப் பல காரியங்கள் உண்டு. மனுஷன் பாவத்தில் விழுந்து, பழுதடையத் துவங்குவான் என்பதை தேவன் முன்னறிந்திருந்தார். முழு மனுக்குலத்தையும் சிருஷ்டித்து, இந்தப் பூமியை முழுமையாக நிரப்புவதற்குப் பதிலாக, ஆதாம் என்ற ஒரே மனிதனை தேவன் சிருஷ்டித்தார். ஆதாம் பாவம் செய்த போது, மரணத்தீர்ப்பைப் பெற்றார். அவர் வழியாக அவருடைய சந்ததிகளும் இந்தத் தீர்ப்பை சுதந்தரித்துக் கொண்டனர். நீதிக்கு எதிராக பாவம் செய்த அந்த ஒரே மனுஷனை விலைக்கு வாங்குவதற்குப் பரிபூரண மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவின் மனப்பூர்வமான பலி தேவைப்பட்டது. இந்தப் பலியினால், ஆதாமுக்குப் பிறந்த முழு சந்ததிகளையும் மீட்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இது தேவனுடைய பரிபூரணமான நீதியின் பிரமாணத்தை திருப்தியாக்கியது (யாத். 21:23-25; உபா. 19:21; ரோ. 5:12; 18-19).

தேவனுடைய தெய்வீக ஞானம், பயன்படுத்தப்பட்டதற்கு மற்றொரு எடுத்துக்காட்டு - மனுஷனுக்கு தேவன் கொடுத்த மரணமானது, சீர்கெட்டுப் போகாதபடிக்கு அவனுடைய மரணத்தீர்ப்பு அவனைக் கட்டுப்படுத்தியது. தேவன் மனுஷனுடைய

ஆயுசு நாட்களை மரணத்தினால் முற்றுப்புள்ளி வைக்காவிட்டால், மனுஷனுடைய பாவங்களும் கட்டுக்கடங்காமல் போயிருக்கும். ஜலப்பிரளயம் வரைக்கும் மனுஷன் நூற்றுக்கணக்கான வருடங்கள் வாழ்ந்து வந்தனர். "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு" (ஆதி. 6:5)ல் கூறப்படுகிறது.

நோவாவின் நாட்களிலிருந்த கொடுங்கோல் ஆட்சியாளர்களும், சர்வாதிகாரிகளும் இந்நாள் வரைக்கும் நம்மை ஆண்டுகொண்டு வந்திருந்ததால் இந்த உலகம் எவ்வளவு தீமையினால் நிறைந்திருந்திருக்கும் என்று சற்று கற்பனை செய்து பாருங்கள். மரணத்தீர்ப்பினிமித்தம் மிக இரக்கமாக தேவன் மனுஷனுடைய சீர்குலைவைத் தடுத்துவிட்டார். தேவனுடைய அனந்த ஞானத்தில் மனுஷன் பலுகிப் பெருகுவதற்கும், பாவத்தின் விளைவுகளை அனுபவிப்பதற்கும் போதுமான காலத்தைக் கொடுத்தார். பாவத்தின் உண்மையான விளைவுகளாகிய-வேதனைகளையும், அழிவுகளையும் மனுக்குலத்திற்குக் கற்றுக் கொடுப்பதே இலக்காகும்.

கிறிஸ்துவின் இராஜ்யத்தில் மனுக்குலத்திற்கு நீதியான கோட்பாடுகளைக் கற்றுக்கொடுப்பதற்கு ஏற்ற ஆசாரியர்களை இந்தத் தீமையின் அனுமதி உருவாக்குவதே தேவனுடைய தெய்வீக ஞானத்திற்கான நம்முடைய கடைசி எடுத்துக்காட்டாக உள்ளது. இந்த ஆசாரியத்துவத்தின் முதல் அங்கத்தினர் நம்முடைய ஆண்டவராம் இயேசு, இவர் தம்முடைய பரிபூரண கீழ்ப்படிதலை சாதகமற்ற எல்லா சூழ்நிலைகளிலும் நிரூபித்துக்காட்டினார் (எபி. 5:8; 12:3). அவருடைய விசுவாசத்தினால், கிறிஸ்து திவ்ய சுபாவத்தில் தேவனுடைய வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்டு, மனுஷருக்கு நீதியைக் கற்பித்து, தேவனோடு ஒப்புரவாகுவதற்கு ஒரு மத்தியஸ்தரின் பணி கொடுக்கப்பட்டது (எபி. 8:6). இதே ஆவிக்குரிய பரிசையும், வேலைகளையும் பெற்றுக்கொள்வதற்கு இயேசுவைப் பின்பற்றக்கூடிய சபைக்கு அழைப்பு கொடுக்கப்பட்டது (2 பேது. 1:4; ரோ. 2:7; 1 பேது. 2:9-10). இயேசுவைப் போல இவர்களும் முன்னதாகவே பயிற்சிப்பெற்று தங்களுடைய உத்தமத்தை பாதகமான சூழ்நிலையிலும், சாதகமற்ற நிலையிலும் நிரூபிக்க வேண்டும் (எபி. 12:9-11; 1 பேது. 4:12-13). இந்தத் தீமையான உலகம் தற்காலிகமானதாக இருந்தாலும், மத்தியஸ்தர் வகுப்பாரின் வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலையாக இருக்கும் என்று தேவன் தம்முடைய ஞானத்தில் கண்டார்.

**வல்லமையுள்ள தேவன்**

யேகோவா தேவன் ஆபிரகாமை மூன்று தூதர்களின் வழியாகச் சந்தித்தப்போது, சாராள் ஆபிரகாமுக்கு ஒரு குமாரனைப் பெறுவாள் என்று கூறினார் (ஆதி. 18:10). இதைக் கேட்ட சாராள், பிள்ளைப்பெறும் வயதைக் கடந்திருந்ததினால் தனக்குள் நகைத்தாள். இதினிமித்தம் தேவன் அவளுக்கு முன் ஒரு கேள்வி எழுப்பினார். "கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? உற்பவ காலத்திட்டத்தில் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன். அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார்" (ஆதி. 18:14). குறித்தக் காலத்தில் சாராள் ஆபிரகாமுக்கு, ஈசாக்கு என்ற குமாரனைப் பெற்றாள் (ஆதி. 21:1-3). இவ்வாறாக, தேவன் தம்முடைய கேள்விக்குப் பதிலளித்தார். "தேவனால் கூடாதது ஒன்றுமில்லை."

தேவனுடைய வல்லமைக்கான எடுத்துக்காட்டுகள் பலவற்றை வசனங்களில் காணலாம். பரலோகங்களும் மற்றும் பூமியின் சிருஷ்டிப்பு இதில் சிறந்த ஒன்றாகும். "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது" (சங். 19:1-2) என்று சங்கீதக்காரர் கூறுகிறார். எண்ணிக்கையில் அடங்காத எண்ணற்ற நட்சத்திரங்களையும், பால்வளி மண்டலங்களையும் தேவன் சிருஷ்டித்தார் என்பதே இதற்கான சாட்சி. தேவனுடைய அற்புதமான சிருஷ்டிப்பே அவருடைய வல்லமையை நிரூபிக்கும் சாட்சிகளாக இருக்கிறது. மேலும், இது ஒரு தொடர் செயல் என்பதைக் கூறுவதற்கு, "பகலுக்குப் பகல்" மற்றும் "இரவுக்கு இரவு" என்றும், தாவீது பக்தன் குறிப்பிடுகிறார். இந்நாள் வரையிலும்கூட சிருஷ்டிப்பின் மகிமைகளைக் கண்டு நாம் தொடர்ந்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய பிதாவாகிய யேகோவா தேவனாலும், ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவினாலும் நிகழ்த்தப்பட்ட எல்லா அற்புதங்களும் தேவனுடைய வல்லமைக்கு மற்றும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இஸ்ரயேல் தேசத்தை விடுவிப்பதற்கு முன், "நான் என் கையை நீட்டி, எகிப்தின் நடுவிலே நான் செய்யும் சகலவித அற்புதங்களாலும் அதைவாதிப்பேன்; அதற்குப்பின் அவன் உங்களைப் போகவிடுவான்" (யாத். 3:20)

என்று தேவன் மோசேயிடம் கூறினார். இஸ்ரயேலரை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்கு 10 வாதைகளை தேவன் எகிப்திற்கு எதிராக அற்புதமாக நடத்தினார். நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்து, தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தில் தாம், தேவனுடைய குமாரன் என்று நிரூபிப்பதற்கு பல அற்புதங்களை நிகழ்த்தினார். இந்த அற்புதங்களை நிகழ்த்த, பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனுக்கு வல்லமையைக் கொடுத்தார் என்று பேதுரு கூறுகிறார். "இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்" (அப். 2:22).

அனுதின வாழ்க்கையில் மனித வாழ்வு ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குச் செல்லக்கூடிய காரியம் தேவனுடைய வல்லமைக்கு மற்றொரு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. ஒரு தாயின் கருப்பையில், ஒரு கரு, குழந்தையாக உருவாகும் செயல் மனித சிருஷ்டிப்பு துவங்கி நடந்து வருகிறது. ஒரேயொரு அணு, நாற்பது வாரங்களில் ஒரு குழந்தையாக உருவாகிறது. மனுக்குலத்திற்குத் தேவன் தந்திருக்கும் இந்த இனப்பெருக்கத்தின் அனுமதி தேவனுடைய வல்லமையின் ஒரு அற்புதமான எடுத்துக்காட்டாக உள்ளது.

தேவனுடைய வல்லமை உச்சக்கட்ட அளவின் நிறைவேற்றம் இனி நடைப்பெறும். "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவா. 5:28-29) என்று இயேசு கூறினார். ஒவ்வொருவரும் கல்லறையிலிருந்து அழைத்து வரப்படுவார்கள். பாவத்தின் பாதிப்புகளாகிய வியாதிகளிலிருந்து விடுதலைப் பெற்ற சரீரமாக தேவன் அனைவரையும் எழுப்புவார் (ஏசா. 33:24). இப்படியாக, பூமியின் கடையாந்திரங்கள் வரைக்கும் நீதியான ஆட்சியை நிரந்தரமாக ஸ்தாபித்து, இந்தத் தீமைகளை விட்டொழிப்பதிலும், தேவனுடைய வல்லமை வெளிப்படுத்தப்படும் (ஏசா. 11:4-9; வெளி. 21:1-4). அப்போது, இந்த முழு மனுக்குலமும் தேவனுடைய வல்லமையை முழுமையாகக் கண்டு மகிழ்ச்சியடைவார்கள்.

**அன்பான தேவன்;**

"பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார். தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது" (1 யோவா. 4:7-8) என்று யோவான் எழுதுகிறார். ஒருவரையொருவர் அன்பு செலுத்தும்படியாக யோவான் இயேசுவின் சீஷர்களை ஊக்குவிக்கும்படி இவைகளைப் பேசுகிறார். அகாபே அன்பு தேவனுடைய தெய்வீக குணத்தின் ஒரு சிறந்த அம்சமாக இருக்கிறது என்று அவர் தெளிவாகக் கூறுகிறார். மேலும், அந்த அன்பின் பிறப்பிடம் தேவனே. இந்த அன்பிற்கு (கிரேக்க வார்த்தையில்- அகாபே) சகோதர அன்பு நல்ல - சித்தம், பாசம், ஈகைக் குணம் தேவனுடைய அன்பு எடுத்துக்காட்டுகளின் மூலம் சிறப்பாக விவரிக்கப்படலாம்.

இந்தப் பூமியில் குடியிருக்கும்படி தேவன் மனுஷனை சிருஷ்டித்தார். மனுஷனுக்குத் தேவையான சகலத்தையும் அவர் முன்பாகவே ஆயத்தப்படுத்தியிருந்தார். அவர்கள் புசிப்பதற்கு அருமையான கனிகளையும், காண்பதற்கு அழகான மலர்களும் மற்றும் சகல காரியங்களும் தேவன் மனிதனின் மேல் வைத்த அன்பின் வெளிப்பாடாகும். ஆனால், பாவத்தின் சாபத்தால் இந்த உலகம் வீழ்ச்சியடைந்தாலும் (ஆதி. 3:17-18) இயற்கையின் அழகில் வரக்கூடிய பரிபூரணமான பூமியின் ஒரு காட்சியைக் காணலாம் - சூரியன் அஸ்தமிக்கும்போது, சுடர்விடும் அழகான நிறங்கள், பனி மூடியிருக்கும் அழகான மலைகள், பூத்துக்குலுங்கும் பூச்செடிகள் எல்லாவற்றிற்கும் மேல் ஜீவனே தேவனுடைய அன்பின் பரிசாக உள்ளது.

மனுஷன் பாவத்தில் விழுவான் என்பதை முன்னறிந்த தேவன் நம்முடைய ஆதிப்பெற்றோரை சிருஷ்டித்ததோடு அவருடைய அன்பை நிறுத்திவிடவில்லை. மீண்டும், மனுக்குலம் மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டு, சீர் பொருந்தி, தேவனுடைய பரிபூரணமான நீதியின் கோட்பாடுகளில் நடக்க கற்றுக்கொடுக்கப்படுவார்கள் என்று தேவன் வாக்களித்திருக்கிறார் (ஏசா. 35; வெளி. 22:1-5). மனிதன் பூரணப்படுவதற்காக, அவர் ஏற்படுத்தின சீர் பொருந்துதலின் திட்டங்கள் தேவனுடைய அன்பின் மற்றொரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. "எல்லா

மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோ. 2:4) என்பதை நாம் புரிந்துகொள்ள துவங்கும்போது, தேவன் நம் மேல் வைத்திருக்கும் அன்பை நாம் உணர துவங்கலாம்.

தேவனுடைய திட்டத்தை நாம் நெருங்கி கவனிக்கும் போது, தேவனுடைய ஆழமான அன்பை நாம் இன்னும் அதிகமாகப் புரிந்துகொள்ளலாம். இறுதியாக, மனுஷனை இரட்சிக்கப் பாடுபட்டு, உபத்திரவப்பட்டு மரிப்பதற்கு தம்முடைய ஒரேபேறான குமாரனை இந்தப் பூமிக்கு அனுப்பி தேவனுடைய அன்பை வெளிப்படுத்தினார் (யோவா. 3:16; ரோ. 5:8). அந்தக் காலக்கட்டம் வரும்போது, தேவன் எந்தநிலையிலும் பின்வாங்கவில்லை. நித்தமும் அவருடைய மனமகிழ்ச்சியாக இருந்து அவருடைய விலையேறப்பெற்ற பொக்கிஷத்தையே அவர் மனுக்குலத்திற்காகத் தந்தார் (நீதி. 8:30). இப்படிப்பட்ட அன்பு, தகுதியான ஒரு இனத்திற்கு அவர் வெளிப்படுத்தாமல் நியாயமாக மரணதீர்ப்பைப் பெற்றவர்களுக்கு வெளிப்படுத்தினார். "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1 யோவா. 4:10) என்று யோவான் கூறுகிறார். தீமையின் அனுமதியின்றி மற்றும் மனுஷன் பாவத்திலும், மரணத்திலும் வீழ்ந்திராவிட்டால் தேவனுடைய தெய்வீக அன்பையும், இரக்கத்தையும் முழுமையாக உணர்ந்துகொள்ள வாய்ப்பிருந்திருக்காது.

தேவனுடைய அன்பு பற்றிய அறிவு நமக்குள் நல்லுணர்வுகளை ஏற்படுத்த வேண்டுமென்று 1 யோவா. 4:7-8 வசனங்கள் கூறுகிறது. நாம் தேவனுடைய பிள்ளைகளாக நடக்க விரும்பினால், இப்படிப்பட்ட அன்பை நம்முடைய வாழ்க்கையில் வளரச்செய்ய வேண்டும். நாம் இந்த அன்பின் வாழ்க்கையை வாழும்பட்சத்தில் நம்முடைய தேவனைப்பற்றிய அறிவை அதிகமாகப் பெறலாம் என்று யோவான் கூறுகிறார்.

**மாறா தன்மை**


இறுதியாக, தேவன் மாறாதவர் என்ற உறுதியைப் பெற்றுள்ளோம். அவருடைய குணங்களும், கோட்பாடுகளும் என்றும் மாறாதவைகள். "நான் கர்த்தர், நான் மாறாதவர்" (மல். 3:6) ல் மல்கியா கூறுகிறார். "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (யாக். 1:17) என்று யாக்கோபும் அதே கருத்தைக் கூறுகிறார். இப்படிப்பட்ட, அசையா உறுதியினால் தேவனுடைய நீதி, ஞானம், வல்லமை மற்றும் அன்பின் மேல் உறுதியான நம்பிக்கையைப் பெறுகிறோம். அதுபோல, நமக்கும் முழு மனுக்குலத்திற்கும் உறுதியளிக்கப்பட்ட வாக்குத்தத்தங்களின் மேலும், நாம் நம்பிக்கையாக இருக்கலாம். இந்த நம்பிக்கையானது, நம்முடைய சிருஷ்டிகரின் குணலட்சணங்களின் மாதிரியைப் பின்பற்றி எல்லா நற்கிரியைகளையும், வைராக்கியத்தோடு செய்து, அவருடைய நோக்கங்களுக்கு முன்னதாகவே நாம் உதவியாக செயல்படுவதற்கு நம்மை ஊக்கப்படுத்த வேண்டும்.

## பரலோக வெளிச்சம்

பரலோக வெளிச்சம் விரிகிறது,
அரசரின் ஆணைக்கு அடிபணிகிறது!
மகிமைக்குள்ளாய் பரந்து விரியும்,
தேசத்தினூடே விரைந்து பரவும்.
மூடநம்பிக்கை தாழ இறங்கி,
தளர்ந்து தோய்ந்து மறைந்தே போகும்.
தொடரும் விடியலின் சூரிய ஒளியில்
நாமும் காண்போம் நல்வழி ஒன்று!
செய்யும் பணிகள் ஆயிரமிருக்குது,
செய்ய வேண்டியே ஆயத்தப் படு!
வேலையாட்கள் கொஞ்சமிருக்குது,
காலை மாலை கடுமையாய் உழைக்குது.
அறுவடை செய்ய கட்டளை பிறக்குது,
விடியலில் அறுவடை ஆரம்பமாகுது.
விளைந்த நிலங்களில் அறுவடைகள்,
கடுமையாய் உழைப்போம் உரிமையுடன்!
இறைவனின் படைப்புகள்
முன்னேற்றமடையுது,
புதிய பூமியின் யூபிலி பிறக்குது,
பழையவை பறக்குது, புதியன பிறக்குது,
வருகுது வருகுது, உள்ளே வருகுது,
பரவசத்தால் என் கண்கள் காணும்,
மலையின் உச்சியில் வெளிச்சம் இருக்குது,
மந்தையுடன் நம் ஆயன் வசிக்க,
ஆயிரமாண்டு ஆட்சி பிறந்தது!

மனுஷனுடைய இயல்பு

# ஜீவ ஆத்துமா



Ray Charlton

"மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன். நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்" (சங். 8:4-6).

மனுஷனைப் பொறுத்தவரையில், "இயல்பு" என்ற வார்த்தைக்கு, "ஒரு நபர் அல்லது ஒரு பொருளின் அடிப்படையான குணங்கள் அல்லது முக்கியமான தரம்" என்று அகராதியில் பொருள் கூறப்படுகிறது.

"தாவீது, தேவனோடு மனுஷரை ஒப்பிடுகிறார்" "உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது" (சங். 8:3) என்று அவர் கூறுகிறார்.

"மனுஷன் எவ்வளவு சிறிதான ஒரு புள்ளியாக இந்த அண்டசராசரத்தில் காணப்படுகிறான். நாம் வானங்களை அண்ணார்ந்து பார்க்கும்போது, தேவனுடைய தெய்வீக வல்லமையை அவைகள் வெளிப்படுத்துவதைக் காணலாம். அதைக் காணக்கூடிய நாம், மேலும் ஆச்சரியப்படுகிறோம். வானங்களைப் பொறுத்தவரையில், சகல நட்சத்திரங்களும், ஒவ்வொரு சூரியன்களாக இந்த விண்வெளியில் அதனுடைய கோள்களோடு சுற்றிவருவதை நினைக்கும்போது, நம்முடைய நிலையை எண்ணி நாம் மெய் சிலிர்த்துவிடுகிறோம். ("Across the Pacific," Pastor Russell's Convention Discourses, page 189, 1912 ).

"பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்கு வோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்" (ஆதி. 1:26-28). இவ் வசனங்களில், மனுக்குலத்திற்காக தேவனுடைய நோக்கத்தை வாசித்து அறியலாம்.

மனுஷனையும், இந்தப் பூமியின் மேல் அவன் ஆட்சி செய்வதற்குத் தேவையான சகல காரியங்களையும், மற்றும் பூமியில் வாழும் சகலவிதமான ஜீவ ஜந்துக்களையும் படைத் ததோடுகூட சிருஷ்டிப்பின் வேலை நிறைவு பெற்றது. "தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது;" (ஆதி. 1:31).

மனுக்குலத்தின் சிருஷ்டிப்பைக் குறித்து, மேலும், விவரங்களை, ஆதி. 2:7-ல் காணலாம். "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" நெப்பீஷ் என்ற எபிரெய வார்த்தை, "ஆத்துமா" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு, சுவாசிக்கும் சிருஷ்டி என்று பொருள். நவீன மொழிபெயர்ப்புகளில், உயிருள்ள ஜீவன் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மனுக்குலம் அழியாமையில் சிருஷ்டிக்கப்படவில்லை. "இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடைய வைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசே. 18:4) என்ற வசனத்தின்படி அவன் மரிப்பான்.

முழுமையான கீழ்ப்படிதலே மனுஷன் நித்தியமாக வாழ்வதற்கு தேவனால் எதிர்பார்க்கப்பட்ட தேவையாகும். "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதி. 2:16-17) என்ற கீழ்ப்படிதலுக்குரிய பரீட்சை வைக்கப்பட்டது.

ஆதாம் மற்றும் ஏவாள் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவரையில் சகலமும் நேர்த்தியாய் நடந்தது. ஒவ்வொரு மாலை நேரமும், தேவன் அவர்களோடு

உலாவினார் என்று ஆதியாகமம் 3:8-ல் கூறுகிறது. அவரோடுகூட ஒரு விசேஷித்த உறவைக் கொண்டிருந்தார்கள். "ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள்" ஆதி. 2:25. அவர்கள் பாவமற்றவர்களாகவும், குற்ற உணர்வில்லாதவர்களும் தங்களுடைய கிரியைகளுக்குத் தீங்கு நினையாதவர்களுமாய் இருந்தனர்.

**கீழ்ப்படியாமை**

சாத்தான் ஏவாளை வஞ்சித்து, ஆதாம் மற்றும் ஏவாள் தேவனோடு பெற்றிருந்த அந்த நெருங்கிய ஐக்கியம் எப்பொழுது முடிவடைந்தது என்ற விவரங்களை அதாவது, அவர்கள் ஏதேனில் எவ்வளவு நாள் வாழ்ந்தார்கள் என்பதை வேதம் கூறுவதில்லை.

"பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான்" (ஆதி. 3:8-10). எவ்வளவு பெரிய மாற்றம்! துவக்கத்தில் தேவனுடைய சத்தம் ஆதாமுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. ஆனால், இப்பொழுதோ அவருக்குப் பயத்தை ஏற்படுத்தியது. துவக்கத்தில் அவர்கள் வெட்கப்படவில்லை. ஆனால், இப்பொழுதோ தங்கள் நிர்வாணத்தினிமித்தம் அவர்கள் வெட்கப்பட்டார்கள். அவர்களின் கீழ்ப்படியாமை இப்போதுள்ள பாவநிலமையை அவர்களுக்கு உணரசெய்தது.

புசிக்க வேண்டாமென்று விலக்கப்பட்ட கனியை ஏவாள் புசிக்கும்படியாக பழைய பாம்பாகிய சாத்தான் எவ்வாறு வஞ்சித்தான்? (வெளிப்படுத்தல் 12:9). மனுக்குலம் பெற்றிருந்த சுயாதீனத்தை சாத்தான் பயன்படுத்தினான். மனுஷன் தனக்கெதிராகவும், தன்னிச்சையாகவும் முடிவெடுப்பதற்கு தகுதிப்பெற்றிருந்தான். சாத்தானுடைய சாதுரியமான வார்த்தைகளால், ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள். கற்றுக்கொள்வதற்கு விரும்பிய ஏவாள் சோதனைக்கு உட்பட்டாள்.

(1) "சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது" (ஆதி. 3:1). தேவனுடைய பட்சத்தில் அநீதி அல்லது ஏதோ விநோதமான காரியங்கள் இருப்பதைப் போல, சாத்தான் ஏவாளிடமும் கேள்வி எழுப்பினான். அந்த ஒரு மரத்தின் கனியை மட்டும் ஏன் விலக்கினார்?

(2) தேவனுடைய பிரமாணத்தில் சொல்லப்பட்டிருந்த சரியான விளக்கத்தை ஏவாள் சாத்தானிடம் கூறினாள். "தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்" (ஆதி. 3:3).

(3) அதற்கு சாத்தான், முதல் மற்றும் மிகப்பெரிய பொய்யைக் கூறி பதிலளித்தான் - "நீங்கள் சாகவே சாவதில்லை!" அதற்குப் பின் தேவன் இப்படிப்பட்ட கற்பனையைக் கொடுத்ததின் காரணத்தையும் கூறினான். "நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது" (ஆதி. 3:4-5).

போதுமான அளவில் ஏவாளின் சிந்தையில் சாத்தான் சந்தேகங்களை விதைத்தான். இந்தக் கனி ஏன் விலக்கப்பட்டது? என்ற கேள்வி, அவளுக்குள் ஓயாமல் எழும்பியது. "அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்" (ஆதி. 3:6). வெளிப்புறமான தோற்றத்தை வைத்து, நியாயம் தீர்க்கக்கூடிய மனுஷனுடைய குணலட்சணத்தில் ஒன்றை ஏவாள் இங்கு நடைமுறைப்படுத்திக் காட்டினாள்.

தீர்க்கதரிசியாகிய சாமுயேல், இராஜாவாகிய சவுலுக்குப் பின் வருபவரை அபிஷேகிக்கச் சென்றபோதும், இப்படிப்பட்ட ஒரு பிரச்சனையில் அகப்பட்டார். "கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரிர வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்" (1 சாமு. 16:7). இந்த சம்பவங்களில் ஒரு முக்கியமான கோட்பாட்டைக் காணலாம். வெளித்தோற்றங்கள் நம்மை வஞ்சிக்கக்கூடும். அதிகமான ஞானத்தைப் பெற விரும்பின ஏவாள், வஞ்சிக்கப்பட்டு அந்த கனியைப் புசித்தாள்.

### ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை

ஏவாள் அந்தக் கனியை ஆதாமுக்குக் கொடுத்தப்போது அவனும் புசித்தான். ஆதாம், ஏவாளை அதிகமாக நேசித்ததினிமித்தம் அவளுக்கு செவிசாய்த்து, தேவனுடைய கற்பனைக்குக் கீழ்ப்படியவில்லை என்று ஆதியாகமம் விவரிக்கிறது. பின் வந்த அப். பவுலும், விவரமாகக் கூறுகிறார். "மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்" (1 தீமோ. 2:14). சாத்தானாலும் மற்றும் ஏவாளாலும் ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. அவர் செய்ததை இன்னதென்று அறிந்து செய்தார்.

ஆதாம் தன்னுடைய கீழ்ப்படியாமைக்கு மற்றவர்கள் மேல் பழியைச் சுமத்தின காரியம் மனுஷனுடைய இயல்பின் மறுபக்கத்தைக் காட்டுகிறது. ஏன் கீழ்ப்படியவில்லை என்று தேவன் ஆதாமிடம் கேட்டபோது, "என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன்" (ஆதி. 3:12) என்று பதிலளித்தார். அவர் ஏவாளை தந்ததினிமித்தம் தேவனையும், தன்னுடைய பாவத்திற்காக ஏவாளையும் குற்றம் சாட்டினார். தன்னுடைய சொந்த கிரியைகளுக்கு அவர் எந்த பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

சாத்தான் கூறினவைகளில் ஓரளவுக்கு உண்மை இருந்ததினால் மனுஷன் கீழ்ப்படியாமைக்குள் அகப்பட்டான். "பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று, அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார். அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போம் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்" (ஆதி. 3:22-24).

### தண்டனை

தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டதும் மற்றும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மரணத்தீர்ப்பும் அவர்களின் கீழ்ப்படியாமைக்கு உச்சக்கட்ட தண்டனையாகத் தோன்றலாம். ஆயினும், இவர்களுக்குப் பின்வந்த அடுத்த தலைமுறையின் பாவநிலை எல்லை மீறி இரக்கமற்ற முறையில் காயீன் தன்னுடைய சகோதரனைக் கொலை செய்ததினிமித்தம் தேவனுடைய ஞானம் வெளிப்பட்டது. மனுஷனுக்கு சுயாதீனத்தைக் கொடுத்து, சாத்தான் அவர்களை வஞ்சிக்கும்படி அனுமதித்து, இனிவரும் காரியங்களைப் பார்க்கும் போது, தேவனுடைய சிருஷ்டிப்பில் மனுக்குலம் ஒரு முழு தோல்வியைப் போல காணப்படலாம். ஆயினும், தேவனுக்கென்று ஒரு குடும்பத்தை ஏற்படுத்தி அந்த குடும்பத்தினர் அனைவரும் வருங்காலத்தில் சுயாதீனத்தோடும், தங்களுடைய முழு விருப்பத்தோடும் அவரிடத்தில் அன்புகூர்ந்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்கள் என்பதே தேவனுடைய திட்டமாகும்.

பாவத்தின் விளைவுகளினால் பெறும் அனுபவத்தினாலும், உபத்திரவத்தினாலும் மட்டுமே மனுக்குலம் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ள முடியும் என்பதை தேவன் அறிந்திருந்தார். மனுஷன் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ள இயலாதவன் என்பதையும் அறிந்திருந்தார். "ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி, எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங்கூடாதே" (சங். 49:7-8). பரிபூரண மனுஷனாகிய ஆதாமுக்குப் பதிலாக, ஒரு பரிபூரண ஜீவன் கொடுக்கப்பட வேண்டுமென்பதே தேவனுடைய நீதியாகும். விழுந்துபோன மனுக்குலத்திலிருந்து, தேவனுடைய இந்த நீதியை திருப்தி செய்ய முடியாது. ஏனெனில், "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி" (ரோ. 3:23) என்று எழுதப்பட்டுள்ளது.

மனித சிருஷ்டிப்பிற்காக தேவனுடைய மாபெரும் அன்பு அவர் தந்த ஈடுகிரயத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா. 3:16).

தேவனுடைய குமாரன் ஓர் ஆவிக்குரிய ஜீவியாக இருந்ததே பிரச்சனையாக இருந்தது. லோகோஸாக இருந்த தேவனுடைய ஒரேபேறான குமாரனானவர் இந்த கிரயத்தைச் செலுத்த இயலவில்லை. ஆகவே, அவருடைய குமாரன் ஆதாமின் பாவங்களற்ற நிலையில் மனுஷனாக இந்த உலகத்தில் பிறக்கும்படி தேவன் ஒரு வழி வகுத்தார். இப்படியாக, தேவன் ஒரு இரட்சகரை நமக்கு வாக்களித்தார். "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்,

அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" ஏசா. 7:14. குறித்த காலம் வந்து, அவைகள் நிறைவேறும் வரை எதுவும் தெளிவாக வெளிப்படவில்லை.

"இயேசுகிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது" (மத். 1:18). பரிபூரணமான மனுஷ வித்து, தேவன் மரியாளுக்குள் கருத்தரிக்கச் செய்ததை இந்தப் பகுதி விவரிக்கிறது. இதினிமித்தம், இயேசு, ஆதாமின் சந்ததியாகவும், ஈடுகிரயத்தைச் செலுத்துவதற்கு ஒரு பரிபூரண மனுஷனாகவும் இந்த உலகத்தில் பிறந்தார்.

ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டதற்கும், இயேசு இந்த உலகத்தில் பிறந்ததற்கும் இடையில் நான்காயிரம் வருடங்கள் காணப்படுகிறது. இது ஒரு நீண்ட இடைவெளியாகக் காணப்படலாம். ஆயினும், தேவனுடைய கால அட்டவணை, "நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத் திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்" (கலா. 4:4-5) என்பதைக் காணலாம்.

**விடுவிப்பு**

ஆதாம் மற்றும் ஏவாளுக்கும் தனக்குமுள்ள வித்தியாசத்தைக் காண்பிக்கும் பொருட்டு, கிறிஸ்து மனுக்குலத்திற்காக தம்மை ஈடுகிரயமாகக் கொடுக்க முன் வந்தார். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி. 2:6-8). ஒரு அடிமையின் நிலையில் மனுக்குலத்திற்குத் தேவையான பணி செய்வதை கிறிஸ்து ஏற்றுக்கொண்டார். அவர் மேன்மையான எந்த நிலையையும் விரும்பவில்லை.

பாவமில்லாத நிலையிலும் நம்மையே சகல காரியங்களிலும் இயேசு சோதிக்கப்பட்டார். ஆகவே, நம்முடைய பலவீனங்களை அவர் நன்கு உணர்ந்திருக்கிறார் (எபி. 4:15). ஏவாளைப் போல பரலோகத்தின் தந்தைக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதற்கு சாத்தானால் அவரும் சோதிக்கப்பட்டார். இவைகள் மத். 4-ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவருடைய சோதனைகளில் கீழ்க்காணும் காரியங்கள் அடங்கும்.

(1)இயேசுவுக்கு நன்மை உண்டாகும்படிக்கும், அவர் தேவனுடைய குமாரன் என்று நிரூபிப்பதற்கும் அற்புதங்களைச் செய்யும்படி ஆலோசனைக் கூறப்பட்டது.

(2) ஆலயத்தின் உச்சியிலிருந்து குதித்து, தூதர்களால் தாங்கும்படி செய்வதினிமித்தம் அவர் தேவனுடைய குமாரன் என்று நிரூபிப்பதற்கு ஆலோசனைக் கூறப்பட்டது.

(3)இந்த உலகத்தின் சகல இராஜ்யங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அவருக்கு முன் வைக்கப்பட்ட சகலவிதமான உபத்திரவங்களையும் ஒதுக்கிவிட்டு, சாத்தானை வணங்கும்படி ஆலோசனைக் கூறப்பட்டது.

ஒவ்வொரு சோதனையிலும் இயேசுவுக்கு முன் வைக்கப்பட்ட பாடுகளையும், உபத்திரவங்களையும் ஒதுக்கி வைக்கப்படுவதற்கு ஆலோசனைக் கூறப்பட்டது. ஒவ்வொரு முறையும் கிறிஸ்து, சாத்தானின் நயவஞ்சகமான சூழ்ச்சிகளுக்கு ஏற்றவாறு வசனங்களினாலும், தேவ சித்தத்தின் படி பதிலளித்தார். இவ்வாறு, சாத்தானுடைய சோதனைகளுக்கு ஒவ்வொருவரும் பதிலளிக்க வேண்டுமென்று அவருடைய சீஷர்களுக்கு மாதிரியை வைத்தார்.

கிறிஸ்து மாம்சத்தில் வரவேண்டும் என்பதைப் புரிந்துகொள்வதற்கு சற்று கடினமாகத் தோன்றலாம். எபி. 2:14-18 வரையிலுள்ள வசனங்கள் நமக்கு உறுதியளிக்கிறது. இயேசு, அதே இரத்தத்திற்கும், மாம்சத்திற்கும் உடையவரானார். அவர் ஆபிரகாமின் சந்ததியாகவும் இருந்தார். "தேவகாரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும் படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது" (எபி. 2:14, 17). "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2 கொரி. 8:9).

**சத்தியத்தை தக்க வைத்தல்**


மனுஷனுடைய விழுந்துபோன நிலைக்கு இவ்வளவு ஆதாரங்கள் இருப்பினும், அப். யோவான் நமக்குத் தேவையான எச்சரிப்புக்களைப் படிப்படியாகக் கொடுக்கிறார். "பிரியமானவர்களே,

உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். தேவஆவியை நீங்கள் எதினால் அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திகிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது" (1 யோவா. 4:1-3).

இந்த அனைத்து ஆதாரங்களோடு யோவானின் எச்சரிப்பையும் மீறி நிசியாவில் கூட்டப்பட்ட ஆலோசனை சங்கத்தில், (கிபி. 325) தேவனும், கிறிஸ்துவும் சமமானவர்கள் என்ற உபதேசம் சட்ட பூர்வமாக அமுல் படுத்தப்பட்டது. அதற்குப் பின், 5-ம் நூற்றாண்டில் எந்தவிதமான வசன ஆதாரங்களின்றி அத்தேனேசியன் விசுவாச அறிக்கையில், திரித்துவ போதனை அறிமுகப் படுத்தப்பட்டு, பரிசுத்த ஆவியை மூன்றாவது நபராக ஏற்றுக்கொண்டனர்.

இயேசுவின் இயல்பைக் குறித்து வசனங்கள் கூறுவதற்கு இந்தப் போதனை எதிரிடையாக இருந்தது. ஆதாமுக்குப் பதிலாக தன்னை ஈடுகிரயமாகக் கொடுப்பதற்கு அவர் ஒரு பரிபூரண மனுஷனானார். அதற்குப் பின், ஆவிக்குரிய ஜீவியாக உயிர்த்தெழும்பின அவரை பலர் கண்டு ஈடுகிரயத்தை அவர் செலுத்தினார் என்று உறுதிபடுத்தினர். தேவன், குறித்த காலத்தில் கல்லறையிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்டு ஜீவனோடு எழும்பி, பரிசுத்தமான பெரும் பாதையில் நடப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டு, தேவனைப் பற்றியும், அவர்களின் இரட்சகரைப் பற்றியும் மனுக்குலம் கற்றுக்கொள்ளும் போது, இவைகள் ஊர்ஜிதப்படும். இந்த உலகத்தில் சாத்தான் கொண்டுவந்த தீமையின் அனுபவத்தை அனைவரும் பெற்றிருப்பார்கள், அதற்குப் பின், நீதியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்று, அதற்கேற்ற கீழ்ப்படிதலைக் காண்பித்து, மீண்டும், ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிப்பதற்கு தகுதி பெற்றவர்களாக நிரூபிக்கப்படும் போது, நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

தேவனே உமது மூச்சுக்காற்றை எங்கள் மீதே வீசச் செய்யும்,
உமிழும் உந்தன் ஒளியிழைதனையே எந்தன் கண்கள் கூசச் செய்யும்
பரலோ கத்தின் இரகசியமனைத்தும் புதைக்கப்பட்டே மறைந்தே கிடக்கும்
ஆச்சர்யம் நிறைந்த பக்கங்கள் அனைத்தின் மீதும் வீசிவிடும் - அவை
எங்கள் இளைஞரை ஆசீர்வதித்தே முதியோர்களுக்கே வழிகாட்டும்.
புயலின் ஆழத்தில் கால்தடம் பதிக்கும் விசுவாசத்தை அங்கீ கரியும்
உந்தன்தொனியே எமைகூவியழைக்கும், வைராக்கியம் கொண்டே மலையில் ஏற்றும்
நாடோடி தன்னைத் தேடிப்பிடித்தே, வீட்டிற்குள்ளே கொண்டே வாரும்
உந்தன் ஆற்றல் எந்தன் உள்ளத்தில் ஒளிரச் செய்யயும் ஆற்றல் தாரும்
இரட்சகா நாங்கள் உந்தன் சாயலாய் மாறி பிரகாசிக்க போதிக்க, அன்புசெய்ய,
உம்மைப் போலவே வாழ்ந்திட வேண்டி தேவனே எமக்கே கற்றே தாரும்.



# செத்துக்கொண்டே சாவாய்

"புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார்" (ஆதி. 3:11)

**Jerry Wesol**

கடந்த 6000 வருடங்களாக ஆண்டவர் மனுக்குலத்திற்கு அனுமதித்திருக்கும் பாவம் மற்றும் மரணத்தின் விளைவுகளின் அனுபவங்கள் மனுக்குலம் என்றும் மறவாத மிக முக்கியமான பாடத்தைக் கற்றுக்கொள்கிறது. ஆகவே, பாவத்தின் பாடம் மிகவும் அவசியமானது. இக்காலத்து வாழ்க்கையில் இந்த அனுபவங்கள் மிக இக்கட்டானதாக உள்ளது. அந்த அனுபவங்களினாலும் கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தின் உதவியினாலும் மனுக்குலம் பாவத்தைக் களைந்து இருதயத்திலும், சிந்தையிலும் மறுரூபமாக்கப்பட்டு மீண்டும் ஒருமுறை தங்கள் சிருஷ்டிகரின் சாயலைப் பிரதிபலிப்பார்கள்.

### ஆதாம் மற்றும் ஏவாளின் கீழ்ப்படியாமை

கடந்த 6000 வருடங்களாக இந்நாள் வரைக்கும் சாபத்தை விளைவித்த அந்தப் பாவத்திற்கு வழி நடத்தின சம்பவங்களை மீண்டும் நினைவிற்குக் கொண்டு வரலாம்.

"தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" ஆதி. 2:16-17 என்று வசனங்கள் கூறுகிறது. ஏவாள் சிருஷ்டிக்கப்பட்ட பின் ஏவாளை அத்து மீறி பாவஞ்செய்வதற்கு சர்ப்பம் வஞ்சித்ததாகவும், அதினிமித்தம் ஆதாம் பாவத்திற்குள் வழி நடத்தப்பட்டார் என்றும், ஆதி. 3:4-7 வரையிலான வசனங்கள் கூறுகிறது.

"அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டு பண்ணினார்கள்."

அவர்களின் கீழ்ப்படியாமையினால், தேவன் ஆதாமிற்கும், ஏவாளுக்கும் மரணத்தீர்ப்பைக் கொடுத்து, ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டி விட்டார். "இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று, அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார். அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போம் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்" (ஆதி. 3:22-24).

ஏவாள் ஞானத்தை விரும்பினாள். வசனத்தின் படி ஞானம் விரும்பத்தக்கக் காரியமாயிருக்கிறது. "ஞானத்தைச் சம்பாதி, புத்தியையும் சம்பாதி; ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி; பொன்னைச் சம்பாதிப்பதிலும் ஞானத்தைச் சம்பாதிப்பது எவ்வளவு உத்தமம்!" (நீதி. 4:5, 7; 16:16). ஆயினும், அது அறிவின் விருட்சமாக இருந்தபோதிலும், ஏவாள் தேவனின் கற்பனைக்குக் கீழ்ப்படியாமல் போனாள். அவள் ஞானத்தை விரும்பினதினால் கீழ்ப்படியாமையின் விளைவுகளாகிய உபத்திரவங்களினின்று ஞானத்தைப் பெறலாம் என்று சர்ப்பத்தினால் வஞ்சிக்கப்பட்டாள். ஒருவேளை அந்த சர்ப்பம் விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்து மேலும் ஏவாளின் ஆசையைத் தூண்டியிருக்க வேண்டும். ஏவாளின் கண்களுக்கு அந்த கனியும், கனி தந்த மரமும் மிக அருமையாகக் காட்சியளித்தது. ஆகவே, அதிக ஞானத்தைப் பெறும்படியாக அவள் அதைப் பறித்து புசித்தாள். அனுபவம் குறைச்சலினால் ஞானத்தைப் பெறுவதற்கு தேவனுடைய பிரமாணங்களுக்கும், சட்டங்களுக்கும்

உட்பட்டு இசைந்திருக்க வேண்டும் என்பதை ஏவாள் புரிந்துகொள்ளவில்லை. தேவனுடைய பார்வையில் முடிவில் காணப்படும் பலன் கீழ்ப்படியாமையை எவ்விதத்திலும் நியாயப்படுத்தாது.

ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, அவனுடைய கீழ்ப்படியாமையினால் இருவரும் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். அவருடைய எலும்பின் எலும்பும், மாம்சத்தின் மாம்சமாய் இருந்த மனைவியின் இழப்பை நினைத்து ஆதாம் பயந்திருக்கலாம் (ஆதி. 2:23). அவளை இழக்கக்கூடிய வேதனையான சிந்தனை விலக்கப்பட்ட அந்த கனியைப் புசிப்பதற்கு ஆதாமை வழி நடத்தியிருக்க வேண்டும். ஏவாளைப் போல அவரும் விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் தேவன் பேரில் கொண்டிருந்த பக்தி வைராக்கியத்திலும் குறைவாகக் காணப்பட்டார்.

தேவன் ஒரு எளிமையான பிரமாணத்தைக் கொண்டு ஆதாமை சோதித்தார். நன்மை, தீமை அறியத்தக்க கனியைப் புசிக்க வேண்டாம், இந்தக் கீழ்ப்படியாமையின் பலன் மரணமாகும் என்றும் கூறினார். இந்த அனுபவத்தின் கீழ் ஆதாம் தன்னுடைய சிருஷ்டிகளுக்குக் கீழ்ப்படிந்து தேவன் மேல் வைத்திருக்கும் அன்பை தெளிவாகக் காட்டியிருக்கலாம். ஆனால், ஆதாம் அப்படிச் செய்யவில்லை.

தம்முடைய சிருஷ்டிகள் தனக்கு கட்டாயமாகக் கீழ்ப்படிந்து அவரை நேசிக்க வேண்டுமென்று தேவன் வலியுறுத்துவதில்லை. அதற்கு மாறாக, தேவன் மனுஷனை தம்மைப்போல சுயாதீனமுள்ளவர்களாக - தங்கள் இருதயத்திலிருந்து மனப்பூர்வமாக, நியாயமாக யோசித்து விரும்பி கீழ்ப்படிவதற்கும் தேவன் மனுஷனை தனது சொந்த சாயலில் சிருஷ்டித்தார். இப்படிப்பட்ட மனப்பூர்வமான கீழ்ப்படிதலின் பாடத்தைக் கற்றுக்கொடுப்பதற்கு - பாவம் மற்றும் மரணத்தின் தண்டனையின் கீழ் அனைவரும் பாடநுபவித்துப் போராடி கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அனைவரையும் மீட்டெடுப்பதே சிறந்த வழியென்று தேவன் அறிந்திருந்தார். இந்த அனுபவத்தின் வழியாக தேவன் மனுக்குலத்தின் மேல் வைத்திருக்கும் அன்பைக் கண்டு, அவரை நேசித்து, அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவரிடம் பயபக்தியை வெளிப்படுத்துவார்கள்.

**தவறான வழிகாட்டியைத் தேர்வு செய்தல்**

நம்முடைய ஆதி பெற்றோருக்குக் கொடுத்திருந்த சகல காரியத்தையும் சற்று நினைத்துப் பார்க்கலாம். மிதமும், அற்புதமுமான சீதோஷ்ணமும், ஏராளமான உணவு, வியாதியற்ற நிலை, சிருஷ்டிகரோடு நல்லுறவு, பரிபூரண ஜீவன், சகல ஜீவஜந்துக்களின் மேலும் ஆளுகை, அழகான தோட்டங்கள், அருமையான சூரிய உதயங்களும், அஸ்தமனங்களும், எந்தக் கடினமான வேலையில்லை - பரதேசி! அவர்களுக்கு எதுவும் தேவைப்படவில்லை. அவர்களுடைய எல்லாத் தேவைகளையும் தேவன் பூர்த்தி செய்தார். துரதிஷ்டவசமாக தாயாகிய ஏவாள், சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு தேவனால் இன்றும் கொடுக்கப்படாத ஞானத்தைப் பெற விரும்பி, கீழ்ப்படியாமைக்குள் விழுந்தாள். அவளுடைய கீழ்ப்படியாமை அவள் தேவன் மேல் வைத்திருந்த குறைவான பக்தியை வெளிப்படுத்தியது. அதற்குப் பதிலாக, பொய்க்கும், பொய்க்குப் பிதாவுமாய் இருக்கிற சாத்தானின் வார்த்தைகளுக்கு அவள் மதிப்புக் கொடுத்தாள் (ஏசா. 14:14; யோவா. 8:44). தேவன் பேரில் கொண்டிருந்த குறைவான பக்தியே நம்முடைய ஆதி பெற்றோர் பாவம் செய்வதற்குக் காரணமாய் இருந்தது. ஆகவே, இப்பொழுது தேவனை விட்டும், அவருடைய நீதியை விட்டும், இந்த முழு உலகமும் பாவத்தில் காணப்படுகிறது.

**சீர்பொருந்துவதற்கான நம்பிக்கை**

பாவத்தினால் மனுஷன் இந்தப் பூமியின் மேல் ஆளும் தகுதியையும், தேவனோடு நல்லுறவையும் மற்றும் பரிபூரண ஜீவனையும் இழந்தான். அதைத் தொடர்ந்து தேவன் குறுக்கிடா விட்டால், அவன் பாவத்தில் விழுந்து நித்தியமான பூரண நிலையை அடைந்திருப்பான். தேவன் மரண தீர்ப்பைக் கொடுத்திருந்தாலும், வருங்காலத்தில் அதைத் தடுக்கும்படியான ஒரு வாக்குத்தத்தத்தை சாத்தானிடம் கொடுத்திருந்தார். "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்" (ஆதி. 3:15).

இந்த மனுக்குலத்தின் மீட்பு, தேவன் வாக்களித்த சந்ததியாகிய அவருடைய ஒரேபேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக வரும். இவரே சுவிசேஷத்தின் வழியாக ஜீவனையும், அழியாமையையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தவர் (2 தீமோ. 1:10). மீட்பின் காரியம் இரண்டு பகுதிகளைக் கொண்டது என்று இந்த வசனங்கள் கூறுகிறது. தேவன், 4000 வருடங்களுக்கு முன் ஆபிரகாமுக்கு வாக்களித்தபடி, (ஆதி. 22:16-18) ஆவிக்குரிய சந்ததியை வளர்ச்சியடையச் செய்த பின் (வானத்தின் நட்சத்திரங்கள்) பூமிக்குரிய சந்ததியை வளர்ச்சியடையச் செய்கிறார் (கடற்கரை

மணல்). இயேசு, முதலாவது, மெல்கிசெதேக்கின் முறைமையில் இயேசு தம்முடைய சீஷர்கள் பங்கெடுப்பதற்கு ஒரு புதிய ஜீவனுள்ள வழியைத் திறந்தார். மனுக்குலம் மீண்டும் தந்தையோடு உடன்படிக்கையின் ஐக்கியத்தைப் பெறுவதற்கு அவர்களைச் சீர் திருத்துவதே இவர்களின் நோக்கமாயிருக்கும் (1 தீமோ. 2:5-6; கலா. 3:26-29; 1 பேது. 2:9-10).

### தேவன் பாவத்தை ஏன் அனுமதித்தார்?

தேவன் தம்முடைய ஞானத்தில் மிக எளிமையாக மனித சிருஷ்டிப்பின் துவக்கத்தில் அவர்கள் விருத்தியடைவதற்கு முன்னதாகவே அவர் சோதித்தார். நம்முடைய ஆதி பெற்றோரை பாவம் செய்ய அனுமதித்து, அவர்களை ஒரே மனுஷருடைய ஈடுபலியைக் கொண்டு மீட்டுக்கொள்ளலாம் என்ற காரணம் தெளிவாகிறது. "அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப் படுவார்கள்" (ரோ. 5:19). ஈடுபலி கொடுப்பதினால், பாவமும், மரணமும் முற்றிலும் அழிக்கப்பட்டு, தேவனுடைய குமாரன் மிக உயரமான மேன்மைக்கு உயர்த்தப்படுவார். மனுக்குலமும் சாபத்திலிருந்து மீட்கப்படும் மற்றும் சாத்தானும் தேவனுடைய நீதிக்கு இசைந்திராத மற்ற எல்லா ஜீவிகளும் நித்தியமாக அழிக்கப்படுவார்கள் (வெளி. 20:9-10; 21:4).

இந்த சாபம் 6000 வருடங்களுக்கு மேலாக மனுக்குலத்தைப் பாதித்துக்கொண்டு வருகிறது. பாவத்தின் இந்த விளைவுகளினால் வரும் அனுபவங்களை இந்த மனுக்குலம் பெறுவதே இதின் நோக்கமாகும். வேதனை, துக்கம், சுயநலம், ஒருவர் மேலொருவர் அன்பின் குறைப்பாடு, சிருஷ்டிகளின் மேல் பக்தியற்ற உறவு, சிருஷ்டிகரோடு ஐக்கியமில்லா நிலை மற்றும் இறுதியாக, மரணத்தின் மிகப்பெரிய வேதனை இவையனைத்தும் சாபத்தின் அனுபவங்கள். தேவனையும் அவருடைய பிரமாணங்கள் தங்களுடைய இருதயங்களில் ஆட்சி செய்யாவிட்டால், அவருக்கு நித்தியஜீவனைப் பெறுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லையென்று இவைகள் மனிதனுக்குக் காட்டுகிறது.

ஆயினும், பாவத்தில் தொலைத்த சகலத்தையும் கொடுத்து, மீண்டும் மனுஷன் தேவனோடு ஒப்புரவாவதற்கு, அவருடைய திட்டத்தில் ஒரு ஏற்பாட்டை செய்திருக்கிறார். "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோ. 2:4). ஒவ்வொரு தனி நபரும், தேவனோடு ஒப்புரவு ஆவதற்கும், மத்தியஸ்தராகிய கிறிஸ்து மற்றும் அவருடைய சபையின் கீழ் நல்ல சூழ்நிலையில் நீதியைக் கற்றுக்கொள்வதற்குமான வாய்ப்பைப் பெறுவார்கள் (ஏசா. 9:7; 26:9; சங். 110:4).

இறுதியாக, பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் மீட்டெடுக்கப்பட்டவர்களுக்குத் தங்களுடைய தவறுகளை உணர்ந்து, எந்த விதிமுறைகளினின்று பாவத்தைக் களைந்து, நீதியைச் சேவித்து தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு அவர்கள் தங்களை அர்ப்பணிப்பார்கள். இந்த ஓர் சீர் பொருந்துதல், சுயநலம் என்ற கல்லான இருதயத்தை நீக்கிவிட்டு, அன்பு நிறைந்த சதையான இருதயம் பொருத்தப்படும். அப்பொழுது இருதயத்தில் தேவனைப் போல் அன்புள்ளவர்களாய் இருப்பார்கள். "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்" (எசே. 36:26). R3202:6, 1244:6, 4777:2.

### இருதயம் மறுரூபமாவதற்குத் தேவைப்படும்

"உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து" (எசே. 36:26) என்று வசனங்கள் கூறுகிறது. கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியின்போது, ஒவ்வொரு நபரும், பிதாவின் சாயலுக்கு ஒப்பாக தங்களுடைய இருதயத்திலும், சிந்தையிலும் மாற்றமடைந்து, அவருடைய குணத்திற்கு ஒப்பாக மாறவேண்டும். பாவத்தின் அனுபவங்களைப் பெற்ற எல்லா ஜனங்களும், தாங்கள் பெற்றிருக்கும் சிறப்புரிமையைப் பற்றி நன்கு புரிந்துகொள்வார்கள். ஆதாமின் பாவத்தினிமித்தம் அனைவரும் துர்க்குணத்தில் உருவானதை அவர்கள் நன்கு உணர்வார்கள். தேவனுடைய கிருபையினாலும், இயேசுவின் வழியினாலும், அவருடைய இராஜ்யத்தில் அவர்கள் மீட்கப்படுவதற்கென்று, ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்கும் அறிவை அடைவார்கள். தங்களுடைய இருதயத்தை அவர்கள் மாற்றிக் கொண்டால், தேவனிடத்தில் பயபக்தி உணர்வைக் கற்றுக் கொண்டார்கள் என்று பொருள்படும்.

இருதயத்தின் சிந்தையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவ்வாறு வெளிப்படுத்தப்படும்? (மத். 25:33-40) வசனங்களில் காணப்படும் ஒரு உவமையிலிருந்து இதற்குத் தேவையான குறிப்பை முன் வைக்கிறோம்.

"செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார். அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப் பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத் தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக்கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக் கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லா தவராகக் கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக் கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்."

இவர்கள் அன்பின் வழியாக தங்களுடைய இருதயத்திலும், சிந்தையிலும் ஏற்பட்ட மாற்றத்தை வெளிப்படுத்துவார்கள்.

### இருதயத்தின் மாற்றத்தை செயல்படுத்துதல்

"மனுஷனை நோக்கி: இதோ, ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்; பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி" (யோபு 28:28) என்று யோபு எழுதுகிறார். ஒருமுறை, தேவனிடத்தில் பக்தி வைராக்கியம் ஏற்பட்டுவிட்டால் உடனடியாக மனுக்குலம் பாவத்தையும், தீமையையும் புறக்கணித்துவிட்டு, தேவனோடு எல்லா காரியங்களிலும் இசைந்திருப்பார்கள் - பரிபூரண நிலையை அடைவார்கள்.

கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியின் போது, பரிசுத்தமான பெரும்பாதையில் செல்லக்கூடிய மனுக்குலம் ஒவ்வொரு நிலையிலும் பயணித்துக் கொண்டிருப்பார்கள். அந்தப் பெரும்பாதையில் தங்களுடைய இருதயத்தில் ஏற்பட்ட மாற்றங்களை வெளிப்படுத்தும்படியாக, ஒருவருக்கொருவர் உதவிகள் செய்ய வாய்ப்புகள் பெறுவார்கள். நீண்ட காலமாக அந்தப் பாதையில் பயணிக்கக் கூடியவர்கள், தேவனை போல் இருதயத்தைப் பெறுமளவுக்கு வளர்ச்சிகள் அடைவது எதிர்பார்க்கப்படும் (எசே. 36:26). பெரும்பாதையில் செல்லக்கூடியவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் இந்த ஒரு மாற்றம் வெளிப்படும். சதையான இருதயம் எவ்வாறு வெளிப்படுத்தப்படும் என்பதை சகோ. ரஸல் மிக அழகாக விவரிக்கிறார்.

"எந்தவிதமான சொத்துக்களும், உரிமைகளுமின்றி அனைவரும் கல்லறையை விட்டு எழுந்துவருவார்கள். லாசருவைப் போல அனைவரையும் இயேசுவே எழுப்புவார். லாசருவின் கல்லறை வஸ்திரங்களைக் களைந்து அவரைப் போஷிப்பதற்கு அவருடைய சிநேகிதர்கள் மகிழ்ச்சியோடு அனுமதிக்கப்பட்டார்கள். ஒருவர் எழுந்திருக்கும்போது, புசிப்பதற்கு ஒன்றுமில்லாமல், உறங்குவதற்கும், ஜீவிப்பதற்கும் இடமில்லாதவர்களாக ஒருவரும் விட்டுவிடப் படுவதில்லை. அவர்களுக்குத் தேவையான சகலமும் கொடுக்கப்படும். தேவனுடைய கிரியைகள் அனைத்துமே அவருடைய அன்பு, இரக்கம் மற்றும் பாசத்தில் வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கிறது. ஆயிரவருட ஆட்சியின்போது, அவர்கள் பெறும் அறிவு, விசுவாசத்தை ஊன்றியிருக்கும். அவர்கள் பெற்ற விசுவாசத்திற்கு எந்த பரிசும் அளிக்கப்படாது. ஆனால், அவர் வெளிப்படுத்தும் கிரியைகளுக்குப் பலனளிக்கப்படும்."

"நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையே கிரியைகளுக்கு அடிப்படையாக இருக்கிறது. கீழ்ப்படிதலும் கிரியைகளின் மூலமாக செயலாற்றுவதும் புது உடன்படிக்கையின் அடிப்படையாக இருக்கிறது. அன்பு மற்றும் அதனுடைய கனிகள் நற்கிரியைகள் அடிப்படையில் அந்த யுகத்தின் செம்மறியாடுகளுக்குப் பரிசளிக்கப்படும்" (R701:1).

"தேவனுடைய ஆவியையும், அன்பையும் உடையவர்கள் சீர் பொருந்துதலின் செய்தியை மனுக்குலத்திற்கு எடுத்து செல்வதற்கு மகிழ்ச்சியாக இருப்பார்கள் - பார்வையற்றோருக்குக் கலிக்கம் போடுவது, காது கேளாதவர்களின் காதுகளைத் திறப்பது மற்றும் பாவத்திலிருப்போரை தேவனோடு ஒப்புரவாக்குவதாகும் (R5531:5).

ஒருவருக்கொருவர் உதவி செய்வது, ஒரு சிறப்புரிமையாகவும், இருதயத்தின் வாஞ்சையுமாக இருக்கும். ஒருவரையொருவர் போஷிப்பது அவசியமாக இருக்கும். ஆனால், ஆவிக்குரிய போஜனங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு, சகல பரிசுத்தமான காரியங்களில் வழி நடத்துவது அதை விட மிக முக்கியமானது. அந்த நேரத்தில் சிறியோர் முதல் பெரியோர் வரைக்கும் அனைவரும் கர்த்தரை அறியும் அறிவைப் பெற்று ஒவ்வொரு மனுஷனுடைய வாழ்க்கையும் ஓப்பீரின் பொன்னைப் பார்க்கிலும் விலையேறப் பெற்றதாக இருக்கும் என்று தேவன் வாக்களித்திருக்கிறார் (எபி. 8:11; ஏசா. 13:12).

அன்பே அடிப்படையான கோட்பாடு என்று மனுக்குலம் கற்றுக்கொள்ளும். அவர்களுக்கு மன்னிக்கப்பட்டதுப் போல முந்தைய வாழ்க்கையில் அவர்களுக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களை மன்னிக்க வேண்டும். சகலவிதமானக் கசப்புகளையும், வைராக்கியங்களையும், பகைகளையும் பின்னாக எறிந்து, ஒருவரையொருவர் மன்னித்து மறப்பதற்கு அனைவரும் அன்பின் ஆவியை மிக உறுதியாகப் பெற்றிருப்பார்கள்.


கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியின் முடிவில் மனுக்குலம் தேவனுடைய சாயலைப் பெற்று, மீண்டுமாக அவருக்குப் புத்திரர்களாக இருப்பார்கள். அவர்கள் அனைவரும் உண்மையில் அவருடைய ஆவியையும், அவருடைய பிரமாணங்களையும் தங்களுடைய இருதயத்தில் எழுதியிருப்பார்கள். "தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்" (1 யோவா. 4:16). சகலமும் முடிந்த பின் தேவனே சகலத்திலும் சகலமுமாக இருப்பார் என்று பவுல் கூறுகிறார் (1 கொரி. 15:28).

### கிறிஸ்தவர்களுக்கானப் பாடம்

கிறிஸ்துவின் சீஷர்களாக இருப்பதினால், பாவத்தைக் களைவதும் மற்றும் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் பாவத்தை நம்முடைய கண்களை விட்டு அகற்றுவதற்கு உண்டான பாடம் எப்பொழுதும் நம்முடைய சிந்தையில் செதுக்கப்பட்டிருக்க வேண்டும். பரலோகப் பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிவதற்காக, நம்முடைய பூமிக்குரிய சித்தத்தையும், மாம்சத்திற்குரிய இலக்குகளையும் விட்டுக்கொடுத்து விட்டோம். இவைகளைக் கீழ்ப்படிய மறுத்தால் பாவமாகும். அதாவது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரலோகப் பரிசை இழந்து விடுவோம். ஆகவே, ஜீவ கிரீடத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் பாவத்திற்கு எதிராகப் போராடி மரணபரியந்தம் விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டும் (எபி. 12:1; வெளி. 2:10).

மரணத்தின் இயல்பு

# மரண நித்திரை



"உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்" (பிர. 9:5)

Jerry Monette

மனித வரலாறு கடந்து வந்த சகல யுகங்களிலும் மரணமானது, ஜீவனுடைய முடிவு என்று ஏற்றுக்கொள்வதற்கு மனப்பூர்வமாகச் சம்மதிப்பதில்லை. மரணம் தங்களுடைய வாழ்க்கையை முடித்து விடுகிறது. என்ற உண்மையை ஜனங்கள் நம்புவதற்கு மறுக்கிறார்கள். மரணம் மற்றும் மரணத்திற்குப் பின்வரும் வாழ்க்கையைக் குறித்த காரியங்கள் ஒரு கடினமான காரியமாகவே இருப்பது ஆச்சரியமானது அல்ல.

இந்தக் கட்டுரையில் மரணத்தின் இயல்பைக் குறித்த வேதாகமத்தின் போதனையை சற்று ஆராய்ந்து பார்க்கலாம். ஒரு முழு மனுஷன் சரீரம் மற்றும் ஆத்துமா மரணத்தோடு முற்றுப் பெறுகிறது என்று வேதாகமம் போதிக்கிறதா? அழியாமையின் சரீரத்திற்கு மாற்றி விடுவதை அல்லது அழிந்து போகும் சரீரத்திலிருந்து அழிவில்லா ஆத்துமாவைப் பிரித்து மரணம் என்று வேதாகமம் போதிக்கிறதா?

### ஜீவனுக்குப் பின் உள்ள நம்பிக்கை

பார்னா ஆராய்ச்சி குழுவினரின் ஆய்வின்படி மரணத்திற்குப் பின் ஒரு வாழ்க்கை உண்டென்றும், ஒவ்வொரு தனி நபருக்கும் நித்தியமாக வாழக்கூடிய ஒரு ஆத்துமா உண்டென்றும், 80% அமெரிக்கா வாசிகள் நம்புகிறார்கள். Ipsos/ Reuters poll-ஐ பொறுத்த வரையில் உலகளவில் 51% ஜனங்கள் ஜீவனுக்குப் பின் வாழ்க்கை உண்டு என்று நம்புகிறார்கள். 23% ஜனங்கள் மரித்தோரின் வாழ்க்கை நின்றுவிடும் என்று நம்புகிறார்கள். மற்றும் மரணத்திற்குப் பின் என்ன நடக்கும் என்பதை 26% ஜனங்கள் அறியாமலிருக்கிறார்கள்.

தங்களுடைய ஜீவனை மரணம் முடிவுக்குக் கொண்டு வருவதில்லை என்று உறுதிப்படுத்துவதற்காகவே, மரணத்திற்குப் பின் ஏதோ ஒருவகையில் மனுஷன் வாழ்கிறான் என்று அநேகர் நம்புகிறார்கள். இந்தப் பாடத்திற்கு எல்லா மத நம்பிக்கைகளையும் பாரம்பரியத்தையும் நாம் அறிமுகப்படுத்தப் போவதில்லை. மரணத்தைப் பற்றி வேதாகமம் காணக்கூடிய நோக்கத்தையும் மற்றும் இவைகளை கிறிஸ்தவ சமுதாயத்தில் கிறிஸ்தவர்கள் எவ்வாறு விளக்கம் கூறுகிறார்கள் என்றும் மறு ஆய்வு செய்வதே நம்முடைய நோக்கமாக இருக்கிறது. கிறிஸ்தவ வரலாற்றின் வழியாக மரணத்தைக் குறித்த வேதாகம விளக்கங்களைக் காண்பதற்காக ஒரு மேடையை அமைப்பதற்கு சர்ப்பம் கூறின அந்த பொய்யைக் குறிப்பிட வேண்டும். "நீங்கள் சாகவே சாவதில்லை" (ஆதி. 3:4). இந்தப் பொய், கிறிஸ்தவ வரலாற்றில் நம்முடைய காலம் வரைக்கும் தொடர்ந்து ஜீவித்து வருகிறது.

### மரணத்தைக் குறித்த கிறிஸ்தவர்களின் பார்வை

கிறிஸ்தவ வரலாற்றில் பொதுவாக அழியா ஆத்துமா, அழியக்கூடிய சரீரத்திலிருந்து பிரித்தெடுப்பதே மரணம் என்று பொதுவாகக் கூறப்படுகிறது. மரணத்தின்போது, ஆத்துமாக்கள் ஜீவிக்கும் என்ற நம்பிக்கையானது, கத்தோலிக்கப் போதனைகளிலிருந்து தோன்றினதாகும். ஏனெனில், இவர்கள் மரித்தோருக்காக ஜெபிக்கும் பழக்கத்தை உடையவர்களும், ஆத்துமாக்கள் உத்தரிக்கும் ஸ்தலத்தில் இருப்பதாகவும், பரிசுத்தவான்கள் மற்றவர்களுக்காக வாதாடக் கூடியவர்களாகவும் மற்றும் நரகத்தில் நித்தியமான உபத்திரவம் உண்டு என்றும் நம்புகிறார்கள். அகஸ்டின் ( 354-430 கிபி) கால முதல், சரீரம் உயிர்த்தெழும் வரையில் பிரிக்கப்பட்ட நிலையிலுள்ள ஆத்துமா பரதீசிலோ, உத்தரிக்கும் ஸ்தலத்திலோ அல்லது நரகத்திலோ இருக்குமென்று பல கிறிஸ்தவர்களுக்குப் போதிக்கப்பட்டது. இந்த உயிர்த்தெழுதலில் பரிசுத்தவான்களின் இரட்சிப்பு நிறைவடைந்தப் பின் துன்மார்க்கர் அழிக்கப்படுவார்கள்.

ஆயினும், எல்லா கிறிஸ்தவர்களும் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வதில்லை. The Conditionalist Faith of Our Fathers என்ற புத்தகத்தில் மனித இயல்பின் வரலாற்று நம்பிக்கைகளைப் பதிவு செய்திருக்கிறது. அதில் 7-ம் நூற்றாண்டில் மனிதன் அழிவில்லாத ஆத்துமாவைப் பெறவில்லையென்று வேதம் போதித்ததாக சாப்ரோனியஸ் கூறுகிறார். கிபி. 1711-ம் வருடத்திற்கு முன் இயற்கையாகவே ஆத்துமா எந்த உணர்வுமின்றி உறங்குகிறது என்று கூறும் 42 எழுத்தாளர்களை இவர் கோடிட்டுக் காண்பித்திருக்கிறார். இதில் 12-ம் நூற்றாண்டில் வந்த வால்டென்சஸ் மற்றும் 16-ம் நூற்றாண்டில் வந்த

மார்டீன் லூதர் மற்றும் ஸ்பெயின் தேசத்தைச் சேர்ந்த மைக்கேல் செர்வெட்டஸ் அடங்குவார்கள். 1671-ம் வருடத்தில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஜான் லோக் என்பவரும் மரணத்திற்குப் பின் எந்தவிதமான உணர்வுகளும் இருக்க வாய்ப்பில்லை என்று எழுதினர்.

16-ம் நூற்றாண்டில், வேதாகமத்தில் காணப்படாத - அழியா ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காக பாவமன்னிப்பு சீட்டை விற்கவும், வாங்கவும் உத்தரிக்கும் ஸ்தலத்திலிருந்து ஆத்துமாக்களை விடுவிக்க நடத்தப்பட்ட காரியங்களின் மேல் சீர்திருத்தவாதிகளால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதிலிருந்த சில சீர்திருத்தவாதிகள் அழியா ஆத்துமாக்களின் நம்பிக்கையற்றவர்களாக இருந்தனர். எடுத்துக்காட்டாக, "அழியா ஆத்துமாக்களின் கருத்தைப் பொறுத்த வரையில்... ஒன்றுமில்லை. ஆனால், அந்திகிறிஸ்துவின் வளர்ச்சியானது, இக்கருத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது..." என்று மார்டீன் லூதர் எழுதினார். மேலும், "மரித்தோர் உணர்வற்றவர்கள்... அவர்கள் மாதங்களும், வருடங்களும் கடந்துச் செல்வதை அறியாமல் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் உயிர்த்து எழுந்திருக்கும் போது, ஏதோ ஒரு க்ஷணப்பொழுது உறங்கினது போல தோன்றும்" என்றும் எழுதினார். வேதாகமத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த வில்லியம் டின்டேல், லூதரின் காலத்தில் வாழ்ந்தவரும், அழிவில்லா ஆத்துமாவை விசுவாசியாதவருமாயிருந்தார். 1642-1727 வருடங்களுக்கு இடையில் வாழந்த ஐசக் நியூட்டன் கூட நம்மைப் போல அழியா ஆத்துமாக்களின் நம்பிக்கையற்றவராக இருந்தார். மற்றும் மில்டன், விஸ்டன் போன்ற பக்தியுள்ள வேதமாணவர்கள் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டனர்.

வேதாகமத்தைச் சார்ந்திராத பிரபலமான நம்பிக்கைகளைப் புறக்கணித்து, (உத்தரிக்கும் ஸ்தலத்தில் உபத்திரவப்படும் ஆத்துமாக்கள்) 18-ம் நூற்றாண்டில், நியாயமான கருத்துக்களையும், தத்துவங்களையும் மறு - ஆய்வு செய்வதற்கு சீர்திருத்தவாதிகள் வழி வகுத்தார்கள். மரணத்திற்குப் பின் ஆத்துமா உயிர் வாழும் என்ற கருத்திற்கு ஓர் ஆங்கில தத்துவ ஞானியாகிய டேவிட் ஹம்மிடமிருந்து நேரடியான எதிர்ப்பு வந்தது. (1711-1776) இதற்கு எதிராக அவர் கேள்வி எழுப்பினார். ஏனெனில், சகலவிதமான அறிவும் உயிருள்ள ஒரு மனுஷனிடமிருந்தே தோன்றும் என்று அவர் அறிந்திருந்தார். மரணம் குறிப்பாக சரீரத்தின் எல்லா உணரக்கூடிய இயல்புகளையும் முடிவுக்குக் கொண்டுவரும். ஆகவே, மரணத்திற்குப் பின் ஆத்துமா தனித்து செயல் பட எந்த வாய்ப்பும் இல்லையென்று அவர் கூறுகிறார்.

கிறிஸ்தவ தேசங்களில் அழியா ஆத்துமாக்களின் மேலுள்ள நம்பிக்கை 18-ம் நூற்றாண்டு வரைக்கும் தொடர்ந்து குறையத் துவங்கியது. நாத்திகமும், அவநம்பிக்கையும் மற்றும் பகுத்தறிவும் பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் பரவியது. (1859)-ம் வருஷம் டார்வினின் கூற்றைப் பற்றிய வெளியீடு மனுஷனுக்கு தெய்வீக ஆவி அல்லது ஆத்துமா இல்லையென்று நம்பத் துவங்கினார்கள். அந்த அழியா ஆவியிலிருந்து சந்ததிகள் பெருகி வருகிறது என்றும் நம்பினார்கள். இந்தக் காரியம், அழிவில்லா ஆத்துமாவின் நம்பிக்கையைத் தகர்த்தது.

**ஜீவனுக்கு பின் வாழ்வைப் பற்றிய ஆய்வு**

மரணத்திற்குப் பின் ஆத்துமா வாழும் என்ற நம்பிக்கை சீக்கிரமாக அமெரிக்காவிலுள்ள பொது ஜனங்களிடம் பெருகினது. 1848-ம் வருடம் மார்சு 31-ம் தேதி அன்று நியூயார்க்கில் மூன்று சகோதரிகள் ஒரு கணக்கெடுப்பை சமர்ப்பித்த போது, மேஜையை தட்டும் சத்தத்தைக் கேட்டு மரித்த ஆவிகளோடு பேசும் பழக்கம் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் பிரபலமாக இருப்பதை அறிவித்தார்கள். இது ஒரு வஞ்சகமாக இருக்கிறது என்றும், தட்டக்கூடிய சத்தம் தன்னுடைய குதிங்காலை தட்டுவதால் வரும் சத்தம் என்றும் 1888-ம் வருடத்தில் மார்கரெட் பாக்ஸ் கூறினார். ஆனாலும், இந்த காரியங்கள் 1882-ம் வருடத்தில் மனோ தத்துவ ஆராய்ச்சி மையம் ஒன்று நிறுவப்படுவதற்கு வழிவகுத்தது. 1930-ம் வருடத்திற்குள் விஞ்ஞான சமுதாயம் பல வார்த்தைகளை உருவாக்கியது. (extrasensory perception and paranormal psychology or parapsychology) என்று பெயரிட்டார்கள். ஜீவனுக்குப் பின் உள்ள ஆராய்ச்சிக்கு இது ஒரு விஞ்ஞான ஆதாரம் கொடுத்தது.

நம்முடைய நாட்களில் மரணத்தின் விளிம்பிற்குச் சென்று வந்தவர்களின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட மரணத்திற்கு நெருங்கிய அனுபவங்களைப் பற்றி ஆராய்ச்சியை வெளியிடப்பட்ட புத்தகங்களே அதிக விலையில் விற்பனையானது. இதினிமித்தம் மரணத்திற்குப் பின் ஆத்துமா ஜீவிக்கும் என்று நம்பிக்கை அதிகரிக்கத் துவங்கியது.

இன்றைய புதிய யுகத்தின் இயக்கத்தில் மரணத்திற்குப் பின் வரும் வாழ்க்கை என்ற நம்பிக்கை பிரபலமாகக் காணப்படுகிறது. பிரிந்துப்

போன மனிதர்கள் மற்றும் கூடுதலான மனித அறிவோடு தொடர்பு வைத்துக்கொள்வதே இந்த இயத்தின் முக்கிய அம்சமாக இருக்கிறது. புதிய யுகத்தில் இது ஒரு நாகரீகமாகக் காணப்படுகிறது. அமெரிக்கா பட்டணங்களில் இது ஒரு சிறந்த தொழிலாக வளர்ச்சியடைந்துக் கொண்டு வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் லாஸ் ஏன்ஜலில் இப்படிப்பட்ட வியாபார ரீதியானவர்கள் இரண்டிலிருந்து ஆயிரம் பேர்களாக அதிகரித்திருக்கிறார்கள்.

பல வழிகளில் மரணத்தைக் குறித்து புதிய யுகத்தின் பார்வையானது, வாழ்க்கையின் உயர்தர நுழைவானது மரணத்திற்குப் பின் ஆத்துமா வாழும் என்ற பாரம்பரியமான கிறிஸ்தவ நம்பிக்கை பிரதிபலிக்கிறது. இரண்டு நம்பிக்கைகளும் ஏதேன் தோட்டத்தில் சொல்லப்பட்ட முதல் பொய்யை நோக்கிப் பயணிக்கிறது. "நீங்கள் சாகவே சாவதில்லை" (ஆதி. 3:4). இந்த பொய்யானது கிறிஸ்தவ மற்றும் கிறிஸ்தவமற்ற மதங்களிலும் சகல நூற்றாண்டுகளாக வாழ்ந்துகொண்டே வருகிறது.

சாத்தானின் வழி முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் அதன் கருத்து ஒன்றே. ஜனங்கள் இந்தப் பொய்யை விசுவாசிக்க வைத்ததினிமித்தம் கிறிஸ்துவின் ஈடுபலிக்கு அவசியமில்லை என்ற கருத்தை முன் வைக்கிறான். மரணம் மற்றும் மரணநிலையைக் குறித்து வேதாகமம் என்ன கற்பிக்கிறதோ, அதைத் தெளிவாகப் புரிந்துகொண்டால் மட்டுமே இப்படிப்பட்ட வஞ்சகத்திலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும். இந்தக் கேள்விகள் பக்கமாக, இப்பொழுது நம்முடைய கவனத்தைத் திருப்புவோம்.

### மரணத்தைக் குறித்த வேதாகமத்தின் விவரம்

மரண நிலைக்கான விவரத்தைக் குறித்து நாம் வசனங்களில் தேடும் போது, மரணம் என்பது, மனுஷன் சிருஷ்டிக்கப்படுவதற்கு எடுக்கப்பட்ட மூல பொருட்களுக்கு மீண்டும் திரும்புவது என்று வேதவசனங்கள் விவரிக்கிறது. ஆதாமின் கீழ்ப்படியாமையினிமித்தம் தேவன் அவருக்குத் தீர்ப்பை அளித்தப்போது, "நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" (ஆதி. 3:19) என்று தேவன் கூறுகிறார். சரீரத்தைவிட்டு ஆத்துமாவைப் பிரிப்பது மரணமல்ல என்று வசனங்கள் கூறாமல், ஒருவருடைய வாழ்க்கையை முடிப்பதே மரணம் என்று கூறுகிறது. மரணம் என்பது, மண்ணுக்குத் திரும்புவது என்பது பொருள். மாறாக, அது மண்ணுக்கும் ஆத்துமாவாகவும் திருப்பக் கூடியது அல்ல.

பழைய ஏற்பாட்டில் மரணத்தின் இயல்பைக் குறித்து மூன்று முக்கியமான காரியங்களைக் கற்றுக்கொள்கிறோம். முதலில், மரணத்தில் ஒருவரும் கர்த்தரை நினைப்பதில்லை. "மரணத்தில் உம்மை நினைவுகூர்வதில்லை" (சங். 6:5).

மரணத்தில், சிந்திக்கக்கூடிய திராணி அற்றுப்போவதினால், எதையும் நினைப்பதற்கு வாய்ப்பில்லை. "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்" (சங். 146:4). சிந்திக்கக்கூடிய திராணி பொதுவாக ஆத்துமாவோடு சம்பந்தப்பட்டிருப்பதினால், மரணத்தில் ஆத்துமா உயிரோடிருந்தால் மரித்த மனுஷனுக்கும் சிந்தனைகள் இருக்குமே, ஆனால், உண்மை என்னவெனில், "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது" (பிர. 9:5).

இரண்டாவதாக, மரணத்தில் அல்லது கல்லறையில் இருப்போர் தேவனை துதிக்க இயலாது. "நான் குழியில் இறங்குகையில் என் இரத்தத்தால் என்ன லாபமுண்டு? புழுதி உம்மைத் துதித்து, உமது சத்தியத்தை அறிவிக்குமோ" (சங். 30:8)? மரணத்தை மண்ணோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, மண்ணைப் போல மரணத்திற்கும் எந்த உணர்வுமில்லை என்று சங்கீதக்காரன் கூறுகிறார். ஆகவே, மரணம் என்பதற்கு உயிரில்லை. அது சிந்திக்கவும் முடியாது. மூன்றாவது, மரணம் ஒரு "நித்திரை" என்று விவரிக்கப்படுகிறது "என் தேவனாகிய கர்த்தாவே, நீர் நோக்கிப்பார்த்து, எனக்குச் செவிகொடுத்தருளும்; நான் மரணநித்திரை அடையாதபடிக்கு என் கண்களைத் தெளிவாக்கும்" (சங். 13:3). மரணம் ஒரு உணர்வற்ற நிலையை அடையாளப்படுத்துவதினால், நித்திரை என்று குறிப்பிடப்படும். மரணத்தின் குணலட்சணம் வேதாகமத்தில் அடிக்கடி பல இடங்களில் காணப்படுகிறது.

### மரணத்தைக் குறித்த புதிய ஏற்பாட்டின் போதனை

மரணம் "நித்திரை" என்று பழைய ஏற்பாட்டைக் காட்டிலும், புதிய ஏற்பாட்டில் அதிக முறைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக உயிர்த்தெழுதலின் நம்பிக்கையானது மரணநித்திரையில் அனைவரும் மனுஷக் குமாரனுடைய சத்தத்தைக் கேட்டு, கல்லறை யிலிருந்து வெளியே வருவார்கள் என்பதற்கான புதிய அர்த்தத்தைக் கொடுக்கிறது (யோவா. 5:28-29).

இயேசு மூன்று பேரை மரணத்திலிருந்து எழுப்பினார். குறிப்பாக, லாசருவையும், யவீருவின் குமாரத்தியை எழுப்பும் போதும், இவர்கள் நித்திரை செய்வதாக இயேசு கூறினார் (மாற். 5:39; லூக். 8:52; யோவா. 11:11). அவர்கள் மரித்து விட்டார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தாலும், உயிர்த்தெழும் வரையில் மரித்தோர் நித்திரையில் இருப்பதைப் போல் இருப்பார்கள் என்பதை அவர் நன்கு அறிந்திருந்ததினால் இப்படிச் சொன்னார்.

மரண நித்திரையில் இருந்த லாசரு, இயேசுவின் சத்தத்தைக் கேட்டு எழுந்ததற்கு ஒப்பாக, இயேசுவின் சத்தத்தைக் கேட்கும் அனைவரும் எழுந்து ஜீவனைப் பெறுவார்கள். ஆனால், வேதாகமத்தில் மரணத்திலிருந்து எழுந்த ஜனங்களிடமிருந்து நாம் வேறு என்ன காரியங்களைக் கற்றுக்கொள்ளலாம்? மரணத்திற்குப் பின் வரும் ஜீவனைக் குறித்த கேள்விகளுக்கு, எப்படிப்பட்ட மதிப்புள்ள பதில்களை இவர்கள் நமக்குக் கொடுக்க முடியும்?

லாசரு, கல்லறையில் நான்கு நாட்கள் இருந்தப் போதிலும், மரண நித்திரையில் எந்த உணர்வும் இல்லாமல் படுத்திருந்ததினால், மரணத்திற்குப் பின் நடந்ததைக் குறித்தும் எதுவும் அவரால் பகிர்ந்துக்கொள்ள முடியவில்லை. லாசருவின் விஷயத்தில் நடந்தது போல, உயிர்த்தெழுப்பப்பட்ட மற்ற ஆறு பேர்களுக்கும் நடந்தது. (1) விதவையின் குமாரன் (1 இரா. 17:17-24), (2) சூனேமியாளின் குமாரன் (2 இரா. 4:18-37), (3) நாயீன் ஊர் விதவையின் குமாரன் (லூக். 7:11-15), (4) யவீருவின் மகள் (லூக். 8:41-42; 49-56), (5) தபீத்தாள் (அப். 9:36-41), (6) ஐத்திகு (அப். 20:9-12). இவர்கள் ஒவ்வொருவரும் நித்திரையிலிருந்து எழுந்தவர்கள் போல மரணத்திலிருந்து வந்தவர்கள். உயிர் பெற்ற இவர்கள் அனைவரும் மரணத்திற்குப் பின் எந்த ஒரு அனுபவத்தையும் பகிர்ந்துக் கொள்ளவில்லை.

**நித்திரை மரணத்திற்கு ஒரு உருவகம்**

வேதாகமத்தில் மரணத்தை நித்திரை என்று உருவகமாக தற்செயலாகப் பயன்படுத்தப் படவில்லை. முதலாவது, மரித்தோரின் நித்திரைக்கும், ஜீவனுள்ளோரின் நித்திரைக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. இருவருமே எழுப்பும் வரையில் ஒன்றும் அறியாத உணர்வற்ற நிலையில் இருப்பார்கள்.

இரண்டாவதாக, ஒரு நம்பிக்கைக்குரிய உருவகமாக "நித்திரை" பயன்படுத்தப்பட்டுள்ளது. நித்திரைக்குப் பின் ஒருவர் நிச்சயமாக எழுந்திருப்பார் என்று உறுதியிருக்கிறது. மறுநாள் காலையில் எழுந்திருக்கும் நம்பிக்கையோடு ஒரு மனுஷன் இரவில் நித்திரை செய்யப் போவதுப் போல, ஆயிரவருட விடியலில் நித்திரையிலிருக்கும் ஒவ்வொருவரையும் இயேசு எழுப்புவார். ஏனெனில், நித்திரை இறுதியானது அல்லாதது போல, மரணமும் இறுதியானது அல்ல. நித்திரையின் போது எந்தவிதமான உணர்வுகளும் இல்லை என்பதே மூன்றாவது காரணமாகும். மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் இடையிலுள்ள நிலையை நித்திரை என்ற உருவகத்திற்கு மிகச் சரியாகப் பொருந்துகிறது. இருதரப்பினருக்கும் இடையிலுள்ள கால அவகாசத்தைப் பற்றி தெரியாது. அது ஒரு நாளோ அல்லது ஒரு மாதமோ அல்லது ஒரு வருஷமாகவோ இருந்தாலும் பிரச்சனையில்லை.

மரணத்திற்கு வேதாகமம் நித்திரை என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதில் ஒரு முக்கியமான சத்தியம் உள்ளது. மரித்தோர் உணர்வற்ற நிலையில் உள்ளார்கள். அவர்கள் நித்திரை செய்யும் காலத்தை அறியாதிருக்கிறார்கள். மேலும், அவர்கள் அழைக்கப்படும் வரைக்கும் என்ன நடந்துக் கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவா களாகவும் புறப்படுவார்கள்" (யோவா. 5:28-29).